பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182


# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06






T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 418





## வடகிழக்கில் தலைவிரித்தாடும் பௌத்த பேரினவாதம் – சி.வி.விக்னேஸ்வரன்





## பாலஸ்தீனம் – இஸ்ரேல் எதனால் இந்த யுத்தம்?

## இனவழிப்பு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழருக்கு ஐ.நா தீர்மானங்கள் இதுவரை வழங்கியது என்ன?

# வட கிழக்கில் தலைவிரித்தாடும் பௌத்த பேரினவாதம் - நீதிபதி ரி.சரவணராஜாவின் வெளியேற்றம் அதனையே எடுத்துக்காட்டுகிறது

## ஓய்வுபெற்ற நீதியரசரும், வடமாகாண சபையின் முன்னாள் முதல்வரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்



**கேள்வி : முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா குருந்தூர் மலை விவகாரத்தில் வழங்கிய தீர்ப்பின் காரணமாக கொலை மிரட்டலையும், மன அழுத்தத்திற்கும் உள்ளாகியதாகத் தெரிவித்து தனது பதவியினை இராஜினாமாச் செய்து நாட்டை விட்டே வெளியேறியிருக்கின்ற விடயத்தினை ஓய்வுபெற்ற நீதியரசர் என்ற அடிப்படையில் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

**பதில் :** நீதித்துறை பாதிக்கப்பட்டால் இந்த நாட்டினது வருங்காலம் மிக மோசமாக அமைந்துவிடும். அண்மைக்காலங்களில் அரசியல் உள்ளீடுகள் அனைத்து இடத்திலும் எல்லாவிதமான விதங்களிலும் இருந்துவருவதைக் காண்கிறோம். அரச திணைக்களங்களில் அரச உள்ளீடுகள் இருக்கின்றன. சகலவிதமான நிறுவனங்களிலும் இந்த அரசியல் உள்ளீடு எவ்வாறாவது உள்வருவதற்கு பார்க்கிறது. இதனுடன் இணைந்து சரித்திர ரீதியான, இன ரீதியான, மத ரீதியான காரணங்களை முன்வைத்து சிலர் நடந்துகொள்வதால் நீதிக்கு பங்கம் ஏற்படுகின்றது.

அவர் ஒரு தமிழராக இருந்து சரியான தீர்ப்பினை வழங்கினாலும் தமிழ் மக்கள் சார்பில், இந்து மதம் சார்பில் தீர்ப்பினைக் கொடுத்தவுடன் அதனை இன ரீதியாக அல்லது மத ரீதியாகப் பார்க்கின்றார்கள். அது ஒரு பிழையான கருத்து. ஏனென்றால் ஒரு நீதிபதி சட்டத்தை நிலைநாட்ட சட்டத்தின் அடிப்படையில் தான் தீர்ப்பினை வழங்குகின்றார். முகங்களைப் பார்த்து தீர்ப்பு கொடுப்பதில்லை அவ்வாறு கொடுக்கவும் கூடாது. இந்த நீதிபதி அவ்வாறு செய்யவும் இல்லை. ஏனென்றால் அவரது தீர்ப்பின் படி இரு வருடங்களுக்கு முன்னர் இருந்த நீதிபதி வழங்கிய தீர்ப்பின் படியான சில தடையுத்தரவுகள் மீறப்பட்டிருக்கின்றன என்று தான் கூறியிருக்கின்றார். அவருக்குக் கூறுவதற்கான அந்த உரித்து இருக்கின்றது. அதாவது குருந்தூர் மலை சம்பந்தமாக.

நீதிபதி அவ்வாறு கூறியது தங்களுக்கு ஏதோ நட்டத்தை ஏற்படுத்துகின்றது என்றவுடன், பௌத்தபிக்குகள், திரு சரத் வீரசேகர போன்றோர், அரசியல்வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இவர்கள் அனைவரும் இணைந்து நீதிபதிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கின்றார்கள் என்று தான் தெரியவருகின்றது. சரியாக என்ன நடந்தது என்பது தெரியாது. ஆனால் ஒரு நாட்டை விட்டு வெளியேறும் அளவிற்கு அவருக்கு ஏதோவொரு வகையில் அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தால் அது ஒரு பார தூரமான விடயம்.

இவ்விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி தன்னுடைய அலுவலர்களிடம் அறிக்கையொன்றினையும் கேட்டிருக்கின்றார். அது வெறுமனே அறிக்கை என்கின்ற விடயம் ஒருபுறமிருக்க, என்ன மாதிரியான அறிக்கைகள் கிடைக்கப்பெறப்போகின்றன என்பதில் பாரிய பிரச்சினைகள் இருக்கின்றன. அறிக்கை ஒருதலைப்பட்சமாக இருந்தால் அவருக்கு ஏற்பட்ட உண்மைகள் மறைக்கப்பட்டு விடும். எனவே தான் ஒரு நீதிபதி தன்னுடைய செயலை சரியாகச் செய்ததன் காரணமாக அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்து நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலை வந்தது. இந்த நாட்டில் இதுதான் முதல் தடவை என்று நினைக்கிறேன். வருங்காலத்திலும் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறாமல் இருப்பதற்கு அரசாங்கத்தால் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இனிவரும் அரசாங்கம் இதனை எவ்வாறு முகங்கொடுக்கும் என்பதனை இருந்து பார்ப்போம்.

**கேள்வி : நீங்கள் பதவியில் இருந்த காலப்பகுதியானது யுத்த சூழல். உங்களுக்கு இதேபோன்றதாக அழுத்தங்கள் அப்போதைய அரசுகளால் பிரயோகிக்கப்பட்டதா?**

**பதில் :** அரசாங்கத்தினால் அழுத்தங்கள் வழங்கப்படவில்லை. பலரும் வேறு விதங்களில் எங்களுக்கு அழுத்தங்கள் கொடுக்கத்தான் பார்த்தார்கள். அது அரசாங்கத்தின் ஊடாகத்தான் நடைபெற்றதா என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால் பல நிகழ்வுகள் நடைபெற்றுள்ளது.

1983ஆம் ஆண்டு நான் மல்லாகம் நீதிபதியாக இருந்தேன். ஜூலை மாதத்தில் இராணுவ உடை தரித்தவர்கள் ஜீப் வண்டிகளில் வந்தவர்கள் மக்கள் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டு போனார்கள். அதன் காரணமாக பலர் இறந்து பாதைகளில் சடலங்கள் இருந்தன. இச்சம்பவம் தொடர்பில் கிராம சேவையாளர்கள் என்னை தொலைபேசியில் அழைத்து இவ்விடயம் தொடர்பில் எவரும் மரண விசாரணை செய்யவில்லை. உறவினர்கள் உடலங்களை எடுத்துச்செல்ல இயலாமல் இருக்கிறது. நீங்கள் ஏதாவது செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள். அந்தக் காலம் யாரும் வெளியில் நடமாட இயலாத பயமான சூழல் நிலவியது. இது தொடர்பில் நான் சுன்னாகம் பொலிசாரிடம் கேட்க, அவர்கள் என்னிடம், “இல்லை சேர் எங்களால் வர முடியாது. இராணுவத்தினர் எங்களை மிரட்டி பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியில் வரக் கூடாது என்று கண்டிப்பாக கூறிவிட்டுச் சென்றிருக்கிறார்கள்” எனக் கூறினார்கள். அதற்கு நான், “நீங்கள் ஏன் அவ்வாறு கூறுகிறீர்கள். இராணுவ உடை தரித்த சில நபர்கள் வண்டிகளில் வருகைதந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருப்பதாகச் சொல்ல”, பொலிசாரும் சம்பவ இடத்திற்கு பின்னர் வருவதற்குச் சம்மதித்தார்கள்.

பின்னர் நான் இவ்விடயம் சம்பந்தமாக பல மரண விசாரணைகளை மேற்கொண்டு வாகன இலக்கம், இராணுவ உடை தரித்த சிலர் செய்த இந்த காரியம் தொடர்பில் பல உண்மைகளை வெளிக்கொணர்ந்தேன். அவ்வாறு தான் எனது தீர்ப்பினையும் வழங்கினேன். பின்னர் இவ்விடயம் அப்போதைய ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிற்கு கூறப்பட்டிருக்கிறது.

அதாவது நீதிபதியாகிய நான் இராணுவத்தினருக்கு எதிராக இராணுவம் தான் இந்தக் குற்றத்தைச் செய்ததாக எழுதியிருப்பதாக நாட்டின் ஜனாதிபதிக்குக் கூறியிருக்கிறார்கள். என்னை கொழும்பு வருமாறு அழைத்திருந்தார்கள். நான் சந்திக்கச் சென்றபோது ஜனாதிபதியின் சகோதரர் என்னை வந்து சந்தித்தார். அவர் என்னிடம் கேட்டார், “என்ன நீங்கள் இராணுவம் கொலை செய்ததாக எழுதியிருக்கிறீர்கள் என்று”. நான் அவரிடம், இல்லை, நான் அவ்வாறு எதுவும் எழுதவில்லை. இராணுவ உடை தரித்த சிலர் தான் இந்த குற்றத்தினைச் செய்ததாகவே எழுதியிருக்கிறேன். நீங்கள் எனது அறிக்கையினைப் பார்வையிடலாம் என்றேன். பின்னர் என்னைப் போகுமாறு அனுப்பிவைத்துவிட்டார்கள்.

பின்னர், அவுஸ்திரேலியாவில் இருந்து பெண் பேராசிரியர் ஒருவர் என்னிடம் கேட்டார். சேர், நீங்கள் இராணுவ உடை தரித்த சிலர் குற்றம் செய்ததாக கூறியிருக்கிறீர்கள். ஆனால் சிலர் இராணுவம் செய்ததாகக் கூறுகிறார்கள். இதில் எந்த விடயம் சரியானது எனக் கேட்டார். நான் அவரிடம், வாகனத்தின் இலக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. நீங்கள் இவற்றின் உண்மைதன்மை குறித்து விசாரித்துப் பாருங்கள் என்றேன். அவர் வாகனங்களைப் பதிவுசெய்யும் கொழும்பு திணைக்களத்திற்கு சென்று பதிவுகளைப் பார்வையிட்டுள்ளார். அவை அனைத்தும் இராணுவத்திற்குரியவை என்று உறுதிப்படுத்தப்பட்டன. அந்த அடிப்படையில் இராணுவ உடை தரித்தவர்கள் இராணுவத்தினரே என்று எழுதி அது உலகம் முழுவதும் பரவிவிட்டது. அதன் பின்னர் அரசாங்கத்தால் எதனையும் செய்ய முடியாமல் போய்விட்டது.

ஆனால் நான் கூறவருவது என்னவெனில், இதேமாதிரியான கஸ்டம் அங்கும் இருந்தது. எங்களுக்கு வர முடியாது என்று பொலிசார் கூறும்போது நீதிபதியால் எதுவும் செய்ய முடியாது. நான் எங்களது மூளையைப் பாவித்து என்ன முறையில் இவர்களை வரவழைக்கலாம் என சிந்தித்து சில உத்திகளைக் கையாண்டேன். நான் இராணுவத்தின் உடை தரித்தவர் என்று கூறியவுடன், பொலிசார் நினைத்தார்கள் அப்படியானால் இராணுவம் இல்லை, இராணுவத்தின் உடை தரித்தவர்கள் என்று தான் நீதிபதி கூறப்போகிறார் என்ற அடிப்படையில், இராணுவத்தின் பேச்சையும் மீறி, வந்து மரண விசாரணையில் கலந்துகொண்டார்கள். ஆனால் இது தொடர்பான உண்மைகளைக் கண்டறிய வேறு விதங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நாங்கள் உண்மைகளை வெளியில் கொண்டுவர படாதபாடு படவேண்டியதாக இருந்தது அந்த காலகட்டத்தில். இவ்வாறான பல விதமான சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

**கேள்வி : அப்படியெனில் நீங்கள் அந்த காலத்தில் வெளிநாடொன்றுக்குச் செல்ல நினைக்கவில்லையா?**

**பதில் :** உண்மையில் இதில் ஒரு முக்கியமான விடயத்தினை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். நான் ஒரு மாணவர் படையைச் சேர்ந்தவன். அந்தக் காலத்தில் போர் பயிற்சி எங்களுக்குத் தரப்பட்டது.

**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## தமிழ் மக்களை அடக்கியாளும் சிங்களப் பேரினவாதம்

இந்த நாடு சுதந்திரம் அடைந்த காலந்தொட்டு இன்றுவரை சிங்களப் பேரினவாதிகளின் சதி வலைக்குள் சிக்குண்டு சின்னாபின்னமாகிக் கிடக்கின்றது. அரசியல், பொருளாதார ரீதியாக இந்த நாடு ஸ்திரத்தன்மையற்ற நிலையில் காணப்படுவதற்கு பிரதானமான காரணமே வெறிபிடித்த சிங்கள இனவாதம் தான். இனவாதத்தினை கக்கிக்கக்கியே இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடியது. புனிதர்களாக தம்மை வரித்துக்கொண்டு உள்ளுக்குள் பௌத்த மேலாதிக்க சிந்தனைகளை மாத்திரம் இந்த நாட்டில் பரவவிட்டுக்கொண்டு, தமது இனம் தமது மதம் வழிபாட்டிடங்கள் மாத்திரம் தான் இந்த நாடு முழுவதும் வியாபித்திருக்கவேண்டும் என்கிற மமதையில் நாடு முழுவதும் அலைந்து திரியும் இந்த சிங்களப் பேரினவாத சக்திகள், மூவின மக்களையும் இன்று பிரித்தெடுத்துள்ளனர். ஒற்றுமை என்பதை கேள்விக்குறியாக்கியுள்ளனர்.

வடகிழக்கில் 30 ஆண்டுகளுக்கு மேலாக அஹிம்சை – ஆயுதம் என போராட்டங்கள் வெடித்ததற்கும் இந்த பௌத்த மேலாதிக்க சிந்தனைகளின் உச்ச அங்கமான இனவாதம் தான் காரணம். வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழர்கள் இன்றுவரை வீதிகளில் தமது உரிமைகளுக்காகப் போராடியே வருகின்றனர். கடந்த காலங்களில் இலங்கையை ஆட்சிசெய்த ஜனாதிபதிகள் தங்களது சுயநலன்களுக்காக தேர்தல் காலங்களில் மாத்திரம் தமிழ்க் கட்சிகளின் வாலைப் பிடிப்பதும், "அது செய்து தருகிறோம் இது தருகிறோம்" என பொய்களைக் கூறி நம்பவைத்து கழுத்தறுத்தது ஒன்றும் தமிழ் மக்களுக்குப் புதிதல்ல. தமிழ் அரசியல்வாதிகள் பலரும் இன்று அரச பக்கத்தில் ஒட்டியிருந்து தமக்கான அரசியல் இருப்பையும் அற்ப சொற்ப சலுகைகளையும் பெற்றுக்கொண்டு, சொகுசாக வாழ்க்கையினை நடாத்தி வருகிறார்கள்.

தமிழர் நிலங்கள் பறிபோய்க்கொண்டே இருக்கின்றன. அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் முன்னரைவிட தற்போது அதிகரித்துள்ளது. பொலிசாரின் உதவியுடன் பௌத்த பிக்குகள் இந்த நாசகார வேலையினைச் செய்கின்றார்கள். அண்மையில் நீதிபதி ஒருவர் கூட மிரட்டலுக்கும் மன அழுத்தத்திற்கும் ஆளாகியிருப்பதாகக் கூறி, நாட்டைவிட்டே வெளியேறிச் சென்றிருக்கிறார். இந்த நாட்டில் நீதி என்பதையே நாம் எதிர்பார்க்க முடியாது என்பது மீண்டும் மீண்டும் நிருபணமாகி வருகின்றது.

கிழக்கில் மேய்ச்சல் தரைகள் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. ஜனாதிபதியின் உத்தரவினையும் மீறி பௌத்த பிக்கு மற்றும் முன்னாள் ஆளுநர் இணைந்து புத்தரின் சிலையினை வைக்கின்றனர். ஜனாதிபதி வெறுமனே தமிழ் அரசியல்வாதிகள் முன் போலியான வாக்குறுதிகளை வழங்கி வருகிறார் என்பது அவரது கடந்த கால மற்றும் அண்மைய செயற்பாடுகளில் இருந்து தெளிவாகியுள்ளது. ஆனால் அதனைப் புரிந்துகொள்ள எமது தமிழ் அரசியல்வாதிகள் தயார் இல்லை. அண்மையில் நாட்டின் ஜனாதிபதி சர்வதேச விசாரணை இந்த நாட்டில் இடம்பெறாது அதற்கு இலங்கை அரசாங்கம் ஒருபோதும் ஒத்துழைக்காது என்கிற அடிப்படையில் நேர்காணல் ஒன்றும் வழங்கியுள்ளார்.

சிங்களப் பேரினவாத சக்திகள் தமிழ் மக்களை மாத்திரமல்ல, முஸ்லீம் மக்களையும் இந்நாட்டில் விட்டுவைக்கவில்லை. மூவினங்களையும் குழப்பியடிக்கும் வேலையையும். இந்த நாடு பொருளாதார ரீதியாக இன்னமும் அதளபாதாளம் நோக்கித் தள்ளப்படும் வேலையையும் திறம்பட செய்து வருகின்றன. பாராளுமன்றில் நேரடியாக இனவாதம் பேசும் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களைக் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த நிலையில் தமிழர்களாகிய நாம் சர்வதேச சமூகத்திடம் கோரி நிற்கும் சர்வதேச விசாரணை என்பது இலங்கையில் சாத்தியப்படுமா?. இதன் மூலம் போர்க்குற்றவாளிகள் உண்மையில் தண்டிக்கப்படுவார்களா? என்கிற பல கேள்விகளை எழுப்புகின்றது.

# கல்லறைப் பூக்கள்



**பல்துறை எழுத்தாளர்**
**புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்**

**18**

விளையாட்டில் வெற்றி தோல்வி வந்தாலும் மரணம் உனக்கு சந்தோஷமான வெற்றியாகவே அமையும்."
"என்ன அம்மா, இன்றைக்குத் தத்துவம் கதைத்துக்கொண்டிருக்க? ஒன்றும் விளங்கவில்லை"
"அட செல்லமே, இது தத்துவம் இல்லடா வாழ்க்கை விளையாட்டில் வெற்றி கொள்வதற்கான வழி முறை."
"நீ, நான் ஆசைப்பட்டமாதிரி வர வேண்டும்"
"கஷ்டம் போல தெரியுது"
"எவ்வளவு பெரிய கனவு கண்டனான்? ஆ...ஆ...ஆ..." - பாக்கியம் அழுது கண்ணீர்த்துளிகள் ஆறாகப் பெருக்கெடுத்து அவனது பாதங்களை கழுவுவதாக உணர்கின்றான்.

"சரி அம்மா, உன்ர ஆசைக்காக மட்டும் இந்த துன்பங்களையெல்லாம் தாங்கிக்கொண்டு படிக்கப் போறன்"
"அச்ச மகன்" - பாக்கியம் மகளை முத்த மழையால் நனைக்கின்றாள்.
"எங்க அம்மா, இவ்வளவு நாள் போயிருந்தாய்?"
"உங்களை எல்லாம் விட்டுட்டு எங்கையும் நான் போக மாட்டண்டா"
"பொய் சொல்லுற"
"சாத் அம்மா பொய் சொல்லுவன"
"அப் ஏன் வீட்டுக்கு கன நாள் வரவே இல்ல? தங்கச்சியும் அப்பாவும் உங்கள நினைச்சு நினைச்சு தினம் தினம் அழுறாங்க"
"அவங்களை இனி நான் பாத்துக்கிறன். நீ கவனமாக போய்ப் படிச்சுட்டுவா"
"ஆமிக்காரர்களைப் பாக்கேக்க பயமாகிடக்கு"
"அது எல்லாம் போகப் போக பழகிரும்"
"சும்மா போவம்மா நீ இப்படித்தான்"
"இல்லடா சாத் போயிட்டு, பத்திரமா வா"
முன் பிரசவப் பருவத்தில் பாக்கியம் சாத்தை மகாராஜவாக வைத்திருந்தாள். சிசுப்பருவத்திலும் குழந்தைப்பருவத்திலும் கண்ணிமைக் காப்பது போல காத்து வந்தாள். பிளைப்பருவத்தில் பெற்றோர்களினது உறவினர்களினது கண்காணிப்பில் வளர்ந்தான். இப்போது வாழ்க்கையில் கட்டிளமைப்பருவத்தையும் வாலிபப் பருவத்தின் முக்காவாசிப் பகுதியையும் தனியாக எதிர் கொள்ளத் தயாராகி விட்டான். வாழ்வின் நடுத்தரப் பருவத்தையும் முதுமைப்பருவத்தையும் எவ்வாறு நீந்தி கடக்கின்றான் என்று பார்ப்போம்.
இடையிடையே நிலத்தில் மழைத்துளிகள் விழுந்த வண்ண உள்ளன. மென்மையான குளிர்க் காற்று மேனியை வருடிச் செல்கின்றது.

பேருந்துக்குள் அடைக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணம் வருகின்றனர்.

இராணுவ கட்டுப்பாடுகள் அற்ற பகுதிகளில் இருந்து வவுனியா நகரினுள் புகும் அனைத்து தமிழ் மக்களும் 'குட்செட்' இடைத்தங்கள் முகாமில் தங்க வைப்பது வழமை. பல்வேறு தேவைகளுக்காக வெளிநாடுகள் செல்லும் தமிழ்ப் பெண்கள், முஸ்லிம் அடிவருடிகள் சிலரிடம் சிக்குப் பட்டு பெண்மையைத் தொலைத்தவர்களும் காணாமல் போனவர்களும் தங்களிடமுள்ள பணத்தை அழித்தவர்களும் ஏராளமானவர்கள்.

'குட்செட்' முகாமுக்குள் சென்று விட்டால், வெளியில் வருவது என்றால் தனியார் காப்புறுதி நிறுவனத்தில் செய்த காப்புறுதிக்காக இழப்பீட்டைப் பெறுவது போன்ற செயலாகிவிடும். முஸ்லிம் இளைஞர்கள் சிலர் சிங்கள இராணுவத்தினர் சிலருடனும் சிங்கள காவற்றுறையினர் சிலருடனும் இணைந்து, தங்களது உடல் சுகத்திற்காக தமிழ்ப் பெண்கள் பலரைச் சிதைத்தார்கள். பணத்திற்காக தமிழ் இளைஞர்கள் பலரைக் கடத்தினார்கள். அவை எல்லாவற்றுக்கும் தமிழ் அடிவருடிகள் சிலரும் சந்தர்ப்பவாதத்திற்காக துணை போனார்கள்.

மக்களுடன் வந்த அரச பேருந்தும் பொதிகளுடன் வந்த 'மினிபஸ்'சும் பிரதான வீதியை விட்டு குறுக்கு வழிக்குள் திரும்புகின்றது. பேருந்தின் வேகம், சுடலைக்குப் பிணம் காவி செல்பவர்கள் சுடலை வாசலை அண்மித்ததும் பாதங்கள் மெதுவாக நகருவது போல, குறைந்து கொண்டே சென்றது. பேருந்தின் பின் வாசலில் நின்ற இராணுவ வீரன் "ஒக்கம கட்டியே பயின" - சிங்களத்தில் கத்தினான்.

பதிலுக்கு, "எல்லாம் எறங்க ரெடியாகுங்கோ. இடம் வந்திருச்சு" - பேருந்தின் முன் வாசலில் இராணுவ வீரனும் குரல் எழுப்பினான்.
அக் குரல் சாத்தின் செவிகளில் விழுந்ததும் முயல் தூக்கத்தில் வந்தவன் திடுக்கிட்டு எழுந்தான். தான் அம்மாவிடம் உண்மையாக உரையாடவில்லை ஆழ் மன நினைவே பகல் கனவாக வந்தது என்பதை அறிந்து கொண்டான்.
'குட்செட்' இடைத்தங்கல் முகாமின் படலை வாயில் பேருந்து உறுமிய வண்ணம் நின்றது. பின்னால் நின்ற 'மினிபஸிலி'ருந்து மக்களின் அனைத்து பொருட்களும் இறக்கப்பட்டு வரிசையாக வீதியின் கரையோரம் அடுக்கப்பட்டிருந்தன.
பேருந்தில் இருந்து இறங்கியவர்கள். தங்களுக்குச் சொந்தமான பைகளை எடுத்துச் சென்றனர். சிலரது பைகள் திருடப்பட்டிருந்தன. சிலரது பைகளிலிருந்து சில பெறுமதியான பொருட்களும் சுவையான உணவுகளும் களவாடப்பட்டிருந்தன. மக்கள் அவற்றைத் தேடி அல்லோலகல்லோலப்பட்டனர். 'பொலிஸார்' இற்றையெல்லாம் கண்டும் காணாத மாதிரி தனிச் சிங்களதில் உரையாடினார்கள். 1999, 2000 ஆம் ஆண்டுகளில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து சென்ற தமிழ் மக்களுக்கு சிங்கள மொழியில் ஒரு வார்த்ரதைக் கூட தெரியாது.
"ஆபிளை வேற பொம்பிளை வேற வர்றது" - படலையின் ஒரு பக்கத்திலிருந்த ஆண் பொலிஸ்சும் இன்னொரு பக்கத்திலிருந்த பெண் பொலிஸ்சும் ஒரே நேரத்தில் அரைகுறையான தமிழில், கதிரைகளில் அமர்ந்தவாறு ஆடு மாடுகளை அழைப்பதைப் போல வாய்களை மட்டும் அசைத்தனர்.

பேருந்தில் வந்த குழந்தையைச் சுமக்கும் தாய் மூன்று வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பதியப்பட்டதுடன், ஒவ்வொரு குடும்பத்திற்கு ஒவ்வொரு தற்காலிக குடும்ப அட்டையையும் வழங்கப்பட்டன.
முகாமுக்குள் புதிதாக சென்ற இம் மக்கள் யுத்தத்தின் போது எதிரியின் முகாம் அழிக்கப்பட்ட நிலையில் திசை மாறி தப்பி ஓடிவந்த இராணுவ வீரர்கள் போல திரு திருவெ முழித்தனர். இரண்டு மூன்று மனிதர்களை ஒன்றாக கட்டியது போல காட்சியளித்த ஒரு போலிஸ்காரன் "ஆக்களெல்லாம் முன்னுக்கு இருக்கிற பொது மண்டபத்துக்கு போய், தற்காலிகமாக இருங்கோ. கொஞ்சத்தால் உங்களுக்கு இடம் தாறம்" - மக்களைக் கலைத்தான்.

'நீங்கள் பாத்துக்கொண்டிருப்பது ச.ன்.டீ.வி.யின தமிழ் மாலை' - மண்டபத்தின் வடக்கு மூலைலயிலிருந்து ஒலி வெளிவந்ததும் பொருளாதார தடைக்கு மத்தியில் வாழ்ந்த மக்களுக்கு தொலைக்காட்சிப் பொட்டியையும் அலைவரிசையையும் பார்த்ததும் ஏதோ தாங்கள் புதிய உலகத்திற்கு வந்தது போல சிறிது நேரம் மெய் மறந்து வைத்த கண் வாங்காமல் பத்து இஞ்சி வர்ண தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்த்தார்கள்.

ஏற்கனவே அடிமையாக்கப்பட் தமிழ் மக்களில், ஒரு கூட்டத்தினர் சிறுவர் முதல் முதியோர்வரை 'சிமெண்ட்' நிலத்தில் அமர்ந்தவாறு வாய்களை 'ஆ'என்று திறந்தவாறு தொலைக்காட்சிப்பெட்டியைப் பார்த்தனர்' இளைஞர்களில் சிலர் பீடி கட்டுகளுடன் மலசலக்கூடத்துக்குள்கடும் பிரயத்தனம் பட்டனர். யுவதிகள் சிலர் தங்களுக்கு வாழ்க்கையில் எல்லாம் கிடைத்து விட்டது போல அரசாங்கத்தின் முகவர்களாகவும் பணம் பறிப்பவர்களாகவும் இச்சைப் போக்கிகளாகவும் பசாப்புக்காரர்களாகவும் செயற்பட்டு தம்மை யார்? என்று காட்டிக்கொள்ளாத, இரகசியப் பொலிஸாருடன், தம்மை மறந்து, உரையாடிக்கொண்டிருந்தனர். அவர்களில் கொல்லப்பட்டர்கள் ஏராளம், வயிற்றில் குழந்தைகளைச் சுமப்பவர்கள் ஏராளம், தந்தை பெயர் தெரியாத பிள்ளைகள் ஏராளம், இச்சைக்குப் பழியாகி பித்துப் பிடித்தவர்களாகத் திரிபவர்கள் ஏராளம். இவை 'எமது தமிழ் இனத்தின் சாபக்கேடு' என சிலர் மனம் சலித்துக்கொண்டனர்.



தொடரும்...

# பாலஸ்தீனம் - இஸ்ரேல் எதனால் இந்த யுத்தம் ?







வந்தேறி இஸ்ரேல் யூதர்கள் இன்று பாலஸ்தீனம் முழுவதையும் ஆக்கிரமித்து கொண்டு, மண்ணின் மக்களை மிக மோசமாக நடத்துகின்றனர்! இதனால், பாலஸ்தீனத்தின் ஹமாஸ் போராளிகள் திருப்பி அடித்துள்ளனர்! அதிபயங்கரமான அழிவுகளை, 'பயங்கரவாதிகளை ஒடுக்குகிறோம்' என்பதாக இஸ்ரேல் செய்கிறது.

சனிக்கிழமை (அக்டோபர்-7) அதிகாலை இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் தொடங்கிய யுத்தம், இஸ்ரேலை நிலைகுலையச் செய்துள்ளது. தரை, கடல் மற்றும் வான் வழியாக தங்களது தாக்குதலை நடத்திய ஹமாஸ் தலைமையிலான பாலஸ்தீன விடுதலை வீரர்கள் பெரிய தாதாவாக தன்னை உலகிற்கு காட்டி வலம் வந்து கொண்டிருந்த இஸ்ரேல் நாட்டின் பிம்பத்தை சுக்குநூறாக உடைத்து ஐம்பதுக்கும் மேற்பட்ட இஸ்ரேல் ராணுவத்தினரை ஒரு ஜெனரல் உட்பட சிறைபிடித்துள்ளனர். காசா மலைக்குன்று பகுதியையே தங்கள் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்துள்ள ஹமாஸ் அமைப்பு, இஸ்ரேல் மீது சுமார் 5,000 ஏவுகணைகளை ஏவியுள்ளது.

பாதுகாப்பில் அதி நவீன முன்னேற்றத்தையும், உளவு வேலையில் உலகிற்கே பாடம் எடுக்கும் வல்லமையும், அடக்கு முறையில் மோசமான ஹிட்லரையும் மிஞ்சிய இஸ்ரேல் இந்த தாக்குதலை எதிர்பார்க்கவே இல்லை! அணுகுண்டுகளை கையில் வைத்துள்ள இஸ்ரேல் இத் தாக்குதல் எப்படி ஏற்பட்டது என அறியும் முன்னரே பாலஸ்தீன போராளிகள் 17க்கும் மேற்பட்ட குடியேற்றங்களை குடியேற்றங்கள் என்பது, ஒரு பகுதியில் வசித்துவரும் பாலஸ்தீனர்களை விரட்டியடித்து விட்டு மற்ற நாடுகளில் இருந்து இஸ்ரேலுக்கு வந்துள்ள யூதர்களை அந்த இடங்களில் இஸ்ரேல் ராணுவ உதவியுடன் குடியேற்றிய யூதக் குடியிருப்புகள் ஆகும். கைவசப்படுத்தி உள்ளனர்.

ஏராளமான ராணுவ முகாம்கள் தாக்கப்பட்டு, ஒரு ராணுவ ஜெனரல் உட்பட 50க்கும் அதிகமான ராணுவ வீரர்களை சிறைபிடித்துள்ளனர் பாலஸ்தீன விடுதலை வீரர்கள். மோட்டார் சைக்கிள்களையும், பாராகிளைடர்களையும், படகு களையும் உபயோகித்து மூன்று வெளிகளிலும் தாக்குதலை தொடுத்து மத்திய கிழக்கு பகுதியின் "தாதா"வான இஸ்ரேலை திக்குமுக்காடச் செய்திருப்பது உலகின் மூலை முடுக்கெல்லாம் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

48 மணி நேர மோதலில் மாத்திரம் 600க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் பலியாகி உள்ளனர். இந்த எண்ணிக்கை ராணுவ வீரர்களை உள்ளடக்கியதாகும். கடந்த நாற்பது ஆண்டுகளில் இதுபோன்ற அவமானகரமான இழப்பை இஸ்ரேல் சந்தித்ததில்லை. பாலஸ்தீனர்களின் பக்கமும் இழப்புக்கள் - இஸ்ரேல் அரசின் கண்மூடிதனமான குண்டுவீச்சால் அதிகம். இவ்விழப்புகளில் பெண்கள், குழந்தைகளின் எண்ணிக்கை அதிகம். பாலஸ்தீன அப்பாவி மக்களை மென்மேலும் அகதிகளாக்கி வருகிறது இஸ்ரேல்.

காசாவில் வங்கிகளை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்துகிறது. மேலும், ஹமாஸ் குழுவினரின் ஆயுதக் கிடங்கு என்பதாக பல குடியிருப்பு பகுதிகளில் இஸ்ரேல் குண்டு மழை பொழிகிறது. "இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக, மக்கள் நெருக்கியடித்து குடியிருக்கும் காசா நகரின் யதார்த்தமான முகத்தை மாற்றுவோம்" என இஸ்ரேல் அமைச்சர் யோவ் காலண்ட் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

இஸ்ரேல் ராணுவம் சுற்றி வளைத்துள்ள காசா பகுதியில் 2008 முதல் 150,000 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் குழந்தைகள் மட்டுமே 45,000 பேர்கள்.

1946ம் ஆண்டு தொடங்கி 2021 வரை ஆண்டுதோறும் அமெரிக்காவிடமிருந்து அதிக ராணுவ உதவிகள் பெற்ற ஒரே நாடு இஸ்ரேல் ஆகும். எண்ணற்ற அணு ஆயுதங்களை வைத்துக்கொண்டு மற்ற நாடுகளை மிரட்டும் இஸ்ரேல், அண்டை நாடுகளான சிரியா, லெபனான், ஜோர்டான், எகிப்து, ஈரான் போன்ற நாடுகளின் மீது தாக்குதல் தொடுக்கும் இஸ்ரேல், பலம்பொருந்திய மொசாத் அமைப்பின் மூலம் தனது "எதிரிகளை" கொலை செய்யும் இஸ்ரேல் நாட்டை சொல்லிக்கொள்ளும் அளவிற்கு ராணுவ அமைப்போ, நாடோ இல்லாத பாலஸ்தீன வீரர்கள் ஹமாஸ் தலைமையில் இன்று (இஸ்ரேலுக்கு) கொடுத்துள்ள அடி முக்கியமானதாகும்.

எழுபது வருடங்களாக தங்கள் சொந்த நாட்டிலிருந்து விரட்டப்பட்டு, குடியுரிமை மறுக்கப்பட்டு, இடம் பெயரும் உரிமை மறுக்கப்பட்டு விரட்டப்பட்ட பாலஸ்தீன மக்கள் எகிப்து, சிரியா, ஜோர்டான், லெபனான் போன்ற நாடுகளில் தஞ்சம் புகுந்து அகதிகளாக வாழ்கின்றனர். மற்றொரு பிரிவினர் காசா (Gaza) என்ற குறுகிய கடலையொட்டிய நிலப்பரப்பில் இஸ்ரேல் ராணுவத்தால் அடைக்கப்பட்டுள்ளனர்.

காசா பகுதியில் (Gaza strip) நெருக்கியடித்து வாழும் பாலஸ்தீனர்கள் வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், படிப்பதற்கும், மணமுடிப்பதற்கும், குழந்தை பெறுவதற்கும், விவாகரத்து பெறுவதற்கும் வீடு கட்டுதற்கும், இடிபாடுகளை எடுத்து கட்டுவதற்கும், இஸ்ரேல் அரசின் அனுமதி வேண்டும்.

கடற்கரையில் நடப்பதற்கும், பாலஸ்தீனர்களுக்கு தடை உண்டு. மீன்பிடிப்பதற்கும் கூட ஒரு நாளைக்கு மூன்று படகுகளுக்கு மட்டுமே அரசு அனுமதி உண்டு. மீறியவர்கள் குழந்தைகளானாலும் ராணுவத்தால் சுடப்படுவர். இப்படி இறந்த குழந்தைகள் ஏராளம். பலூன் பறக்கவிட்டு வேடிக்கை பார்த்த குழந்தைகளை கொன்று குவித்த பெருமை இஸ்ரேல் ராணுவத்திற்கு உண்டு.

இப்படி தினம் தினம் செத்துமடியும் வாழ்க்கையை நடத்தும் காசா பகுதி மக்களின் நலன்களை பாதுகாக்கும் அமைப்பே ஹமாஸ் அமைப்பாகும். இவர்களை சொந்த நாட்டினரை வந்தேறிகளான யூதர்கள், வாழப் போராடும் மண்ணின் மக்களை பயங்கரவாதிகள் எனக் குறிப்பிடுவது வேடிக்கையும், வேதனையுமாகும்.

மேலை நாடுகளால் பாலஸ்தீனத்தில் 1946ல், பல்வேறு நாட்டை சார்ந்த யூதர்களுக்கு ஒரு சிறு பகுதி கொடுக்கப்பட்டது. இதை எதிர்த்து அன்று முதல் தங்கள் நாட்டை மீட்டெடுக்க பாலஸ்தீனர்கள் போராடி வருகின்றனர். போர் குற்றங்கள் மற்றும் இன ஒழிப்பும் தொடர்ந்து இஸ்ரேல் நடத்துகிறது.

அமெரிக்காவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் (வெள்ளை அரசுகள்) கொடுக்கின்ற தைரியத்தினால் சர்வதேச கண்டனங்களையும், ஐ.நா சபை தீர்மானங்கள் பலவற்றையும் காலில் போட்டு மிதிக்கும் இஸ்ரேல் அரசு, தன்னை மத்திய கிழக்கின்" சண்டியனாக" காட்டிக்கொள்கிறது.

இந்நிலையில், "பாலஸ்தீனத்துக்குள் அத்துமீறி குடியேறுபவர்களுக்கு எதிராகவும், பாலஸ்தீனத்தை ஆக்கிரமிக்கும் துருப்புகளின் பயங்கரவாதத்துக்கு எதிராகவும் தங்களை தற்காத்துக் கொள்ளும் உரிமை என்பது பாலஸ்தீனியர்களுக்கு உண்டு" என்று பாலஸ்தீன அதிபர் முகம்மது அப்பாஸ் கூறியுள்ளது கவனத்திற்கு உரியது.

பாலஸ்தீன அதிபர் முகமது அப்பாஸ், விடுதலைக்காக போராடுபவர்களை, பயங்கர வாதிகள் என்று பழித்து, அரசு பயங்கரவாதத்தில் ஈடுபட்டு ஏராளமான பெண்கள், குழந்தை களை கொன்று குவிக்கும் இஸ்ரேலை நேர்மையான அரசு என ஆதரிக்கும் மேலை நாடுகளுக்கோ ஒரு உள்நோக்கம் உண்டு. அந்த நோக்கம் மத்திய கிழக்கில், ஆசியக்கண்டமும், ஆபிரிக்க கண்டமும் இணைகின்ற பகுதியில் தங்களது அவட் போஸ்டாக இஸ்ரேல் நாட்டை நிலைநிறுத்துவதே அந்த நோக்கமாகும்.

மேலை நாட்டு ஊடகங்கள் ஹமாஸ் அமைப்பை, பாலஸ்தீனர்களை பயங்கரவாதிகள் என்று கூறுவது ஒரு இனச் சார்பை காட்டுகிறது என்றால், சில ஊடகங்கள் எதன் அடிப்படையில் பாலஸ்தீனர்களை பயங்கரவாதிகள் என்று கூறுகின்றனர். ஒன்று இவர்கள் வரலாறு தெரியாத அடி முட்டாள்களாக இருக்கவேண்டும் அல்லது மேலை நாடுகளின் அடிவருடிகளாக இருக்கவேண்டும்.

சங்கிகள் இஸ்ரேலை ஆதரிப்பதற்கு ஏதாவது காரணம் உண்டா? என்றால், இஸ்ரேல் படைகள் அழித்தொழிப்பது இஸ்லாமியர்கள் என்பதாலும், இஸ்ரேலை ஆள்பவர்கள் ஆதிக்கக் குறியீட்டின் அடையாளம் என்பதையும் தவிர வேறெதுவும் இல்லை.

**ச. அருணாசலம்**

## வவுனியாவில் ஊடகவியலாளர் நிமலராஜனின் நினைவுதினம் அனுஸ்டிப்பு



படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 23 ஆவது நினைவுதினம் வவுனியா ஊடக அமையத்தில் கடந்த (19.10) மாலை அனுஸ்டிக்கப்பட்டது. வவுனியா ஊடக அமையத்தின் தலைவர் ப.கார்த்தீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முதலாவது ஈகை சுடரினை சிரேஷ்ட ஊடகவியலாளர் கி.வசந்தரூபன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து நிமலராஜனின் உருவப்படத்திற்கு ஏனைய ஊடகவியலாளர்கள் நினைவுச்சுடரை ஏற்றியதுடன் மலரஞ்சலியினையும் செலுத்தினர்.

அவர் தொடர்பான நினைவுப் பேருரையினை ஊடகவியலாளர் இ.சற்சொரூபன் நிகழ்த்தியிருந்தார். அவர் தனது உரையில், இலங்கையில் தமிழ் ஊடவியலாளர்கள் தொடர்ச்சியாக அடக்கு முறைக்கு உள்ளாகும் நிலமை நீடித்து வருகின்றது. அத்துடன் நிமலராஜன் உட்பட படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களிற்கான நீதி பல வருடங்களாக மறுக்கப்பட்டு வருகின்றது. அந்த கொலைகள் தொடர்பாக எவ்வித உள்நாட்டு விசாரணைகளோ அல்லது சர்வதேச விசாரணையோ இடம்பெறாமல் இருக்கின்றமையையிட்டு நாம் கவலையடைக்கின்றோம்.

இந்நிலையில் ஊடக சுதந்திரத்தினை பாதுகாப்பதுடன், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களிற்கான நீதியை பெற்றுக்கொடுப்பதில் உரியதரப்புக்கள் கரிசனையுடன் செயற்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.





## தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் இன்னமும் தொடர்கின்றன – நிகழ்ச்சிநிரல் வகுத்துச் செயற்படும் சிங்கள பேரினவாத அரசு









யுத்தம் நிறைவடைந்து 14 வருடங்களைக் கடந்துள்ள போதிலும் தமிழினத்தின் மீதான அரசின் அடக்குமுறைகளில் மாற்றமெதுவும் ஏற்படவில்லை. காணி அபகரிப்பும், பௌத்த மயமாக்கலும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும், மத வழிபாட்டுத் தலங்கள் மீதான ஆக்கிரமிப்பும் இன்னும் தொடர்கின்றது. வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்கின்ற தமிழ் மக்களின் போராட்டங்கள் இன்று ஜனநாயக வழியில் இடம்பெறுகின்றது.

இனப்படுகொலைக்கான நீதி மற்றும் காணாமல் போனவர்களுக்கான தீர்வு குறித்து இன்றும் அரசிடம் கேள்வி எழுப்பப்படுகின்றது. வருடங்கள் கடக்கின்றபோதிலும் அரசு மரண சான்றிதழ் வழங்குவதில் தான் குறியாகவிருக்கிறதே தவிர, பொறுப்புக்கூறலில் இருந்து விலகியிருக்கிறது.

சர்வதேச சமூகமும் அரசின் இச் செயற்பாடுகள் குறித்து கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றது.

தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடிய விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்து, பயங்கரவாத அமைப்பாக இலங்கை அரசு முத்திரை குத்தியுள்ளது. அவர்களை நினைவுகூர்வதை அரசு எதிர்க்கின்றது. மீறி அஞ்சலி செலுத்துபவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுகின்றார்கள். பொலிஸ் மற்றும் இராணுவத்தின் அராஜக செயற்பாடுகள் தொடர்ச்சியாக வடக்கு மற்றும் கிழக்கில் பதிவாகிறது.

யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் வடக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இதுவொரு திட்டமிட்ட செயற்பாடே என்று கூறுபவர்களும் உண்டு. இளைஞர் மற்றும் யுவதிகள் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர்.

பாடசாலை மாணவர்களும் போதைப்பொருள் பாவிக்கத் தொடங்கியுள்ளனர்.

தமிழினத்தின் கல்விச் செயற்பாடுகள் எதிர்காலத்தில் சிதைவடைந்துபோக வாய்ப்பும் உள்ளது. வடக்கில் - கிழக்கில் வேறெந்த மாவட்டங்களில் இல்லாதவாறு முப்படைகளும் குவிக்கப்பட்டுள்ள சூழலில் எவ்வாறு இந்தப் போதைப்பொருள் பாவனை அதிகரித்தது என்கிற கேள்வி எழுகின்றது.

யுத்தத்தில் உயிர்நீத்த பொது மக்களுக்கும் அஞ்சலி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

மாவீரர்களுக்கும் அஞ்சலி செய்ய முடியாது. இவ் நெருக்கடியான சூழலில் துயிலுமில்லங்கள் துப்புரவுப் பணிகள் செய்யப்படுகின்றபோதும் பொலிசாரின் தலையீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த நல்லாட்சியில் ரணில் - மைத்திரி அரசு தமிழ் மக்களின் ஆதரவால் பதவிக்கு வந்து அஞ்சலி நிகழ்வுகளை நடாத்துவதற்கு அனுமதி வழங்கியபோதிலும், இன்று ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க அவர்களால் மாவீரர் மற்றும் பொதுமக்களுக்கான அஞ்சலி நிகழ்வுகளுக்கு உத்தியோக பூர்வமாக அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை. மீறிச் செயற்படுபவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்கிற விடயம் உறுதிபடத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்று தனக்குத் தேவையாக இருந்த தமிழ் மக்கள் இன்று தமக்குத் தேவையில்லை என்கிற நிலை வந்துள்ளது.

பெரும்பான்மைச் சிங்கள மக்களால் தாம் பதவிக்கு வரமுடியும் என்பதை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிரூபித்தார். பின்னர் அதே மக்களால் பதவியை விட்டு விரட்டியும் அடிக்கப்பட்டார்.

தென்னிலங்கையின் ராஜ பக்ஷக்கள் மாத்திரமல்ல அனைவரும் சிங்கள மக்களால் ஓரங்கட்டப்பட்டுள்ளார்கள். நாட்டு மக்கள் இன்று அதிருப்தியடைந்துள்ளனர்.

இன்றைய தலைமுறையினர் சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்குச் செய்த கொடுமைகளை உணர்ந் துள்ளனர்.

இனப் பிரச்சினைக்கானத் தீர்வினை வழங்காமல் தென்னிலங்கை அரசியல் வாதிகளால் இந்நாட்டினை பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து மீட்க முடியாது. தொடர்ச்சியான அடக்கு முறைகள் நாட்டினை சீரழிக்கும் என்பதை இந்த தென்னிலங்கை அரசியல்வாதிகள் உணர்ந்து செயற்படுவது எப்போது?

**சுழியோடி**

# சர்ச்சைக்குரிய ஒன்லைன் பாதுகாப்புச் சட்டமூலம்



மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டதை அடுத்து அன்றைய பிரதமர் டி.பி. விஜேதுங்க ஜனாதிபதியாக பதவியேற்றார். கைத்தொழில் துறை அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார். முதற்தடவையாக பிரதமர் பதவிக்கு வந்த அவர் லேக்ஹவுஸ் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில், "அரசியலுக்கு வராமல் இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் பத்திரிகை ஆசிரியராகியிருப்பேன் என்று பதிலளித்தார்.

விக்கிரமசிங்கவுக்கு பத்திரிகை ஆசிரியராக வருவது ஒன்றும் சிரமமானதாக இருந்திருக்காது. அவரின் குடும்பம் ஊடக நிறுவனங்கள் பலவற்றை சொந்தமாகக் கொண்டிருந்தது. இன்றும் கூட அப்படித்தான். அவரது தந்தையார் எஸ்மண்ட் விக்கிரமசிங்க லேக்ஹவுஸ் பத்திரிகைகளைப் பயன்படுத்தி அரசாங்கங்களை பதவிக்குக் கொண்டுவரவும் பதவி கவிழ்க்கவும் கூடிய வல்லமைகொண்ட பத்திரிகைத்துறை ஜாம்பவானாக விளங்கினார் என்று கூறப்படுவதுண்டு.

கடந்த வாரம் ஜேர்மனியின் முக்கியமான செய்திச்சேவை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் செய்தியாளரின் சில கேள்விகளுக்கு தனது வழமையான சுபாவத்துக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் அமைதியிழந்து பதிலளித்த வேளையில் கூட ஜனாதிபதி விக்கிரமசிங்க தனக்கு ஊடகங்களுடன் இருந்த ஈடுபாடுகள் பற்றி குறிப்பிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

அந்த நேர்காணலில் விக்கிரமசிங்க நடந்துகொண்ட முறை பலரையும் ஆச்சரியப்படவைத்தது. நேர்காணல்களில் அவர் ஊடகவியலாளர்களுடன் மிகவும் மகிழ்ச்சியாகவும் நட்புரிமையுடனும் பேசுவதே வழமை. அவர் பிரதமராக இருந்த காலப்பகுதிகளில் ஊடக நிறுவனங்களோ அல்லது ஊடகவியலாளர்களோ பெரிதாக அச்சுறுத்தலை எதிர்நோக்கியதாகக் கூறமுடியாது. ஊடகவியலாளர்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் எதிரான வன்முறைகளைக் கண்டிப்பதிலும் அவர் முன்னணியில் நின்றிருக்கிறார்.

இரு தசாப்தங்களுக்கும் அதிகமான காலத்துக்கு முன்னர் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது ஊடகத்துறைக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்த குற்றவியல் அவதூறு சட்டம்(Criminal Defamation Law) நீக்கப்பட்டது. பிறகு மீண்டும் ஒரு தடவை அவர் பிரதமராக இருந்த அரசாங்கமே தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தை (Right to Information Act) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது. பொதுவில் அவர் லிபரல் ஜனநாயக எண்ணப்போக்குடைய ஒரு அரசியல் தலைவராகவே நோக்கப்பட்டார். மேற்குலகமும் கூட இலங்கை அரசியல் தலைவர்களில் விக்கிரமசிங்கவை பெருமளவுக்கு ஆதரித்தது.

ஆனால், கடந்த வருடம் ஜனாதிபதியாக வந்த பிறகு அவர் தலைமையிலான அரசாங்கம் ஜனநாயக விரோத சட்டங்களைக் கொண்டுவருவதில் அடிக்கடி நாட்டம் காட்டுவதை காணக்கூடியதாக இருக்கிறது. அதற்கு இலங்கையின் வரலாறு முன்னென்றும் கண்டிராத வகையில் கடந்த வருடம் இடம்பெற்றதைப் போன்று மீண்டும் மக்கள் கிளர்ச்சி மூண்டுவிடாதிருப்பதை உறுதிசெய்வதில் அரசாங்கத்துக்கு இருக்கும் முனைப்பை தவிர வேறு முக்கிய காரணம் எதுவும் இருக்கமுடியாது.

தற்போது இரு சட்டமூலங்கள் சர்ச்சையை தோற்றுவித்திருக்கின்றன. கடந்த மாதம் வர்த்தமானியில் வெளியிட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமும் (Anti – Terrorism Bill) ஒன்லைன் பாதுகாப்பு சட்டமூலம் (Online Safty Bill) ஆகியவையே அவையாகும்.

கடந்த 44 வருடங்களாக நடைமுறையில் இருந்துவரும் மிகவும் கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை (Prevention of Terrorism Act) பதிலீடு செய்வதற்காக வரையப்பட்டதே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம். கடந்த மார்ச் மாதத்தில் வெளியிடப்பட்ட சட்டமூல வரைவு உள்நாட்டிலும் வெளியுலகிலும் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளானதை அடுத்து அதை மீளாய்வு செய்வதாக அரசாங்கம் உறுதியளித்தது.

தற்போது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்திலும் இடம்பெற்றிருக்கும் சட்டமூலம் அரசாங்கம் கூறிய அந்த மீளாய்வுக்கு பின்னரான வடிவமேயாகும். அதை ஆய்வுசெய்த சட்டத்துறை நிபுணர்களும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் புதிய வரைவில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மக்கள் மீது அடக்குமுறையைப் பிரயோகிக்கக்கூடியதாக நிறைவேற்று அதிகாரத்தை விரிவாக்கும் ஏற்பாடுகளைக் கொண்டதாகவே இருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

குறிப்பாக, நவீன இலங்கையின் வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையில் மூண்டிருக்கும் அரசியல் - பொருளாதார நெருக்கடிகள் அரசுக்கும் மக்களுக்கும் இடையில் ஆழமான அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கும் ஒரு நேரத்தில் இத்தகைய சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அது பெரும் ஆபத்தாக அமையும் என்பதே அவர்களின் உறுதியான நிலைப்பாடாக இருக்கிறது. புதிய சட்டமூலத்தை மீண்டும் ஒரு தடவை மீளாய்வுக்கு அரசாங்கம் உட்படுத்துமா என்பது முக்கியமான ஒரு கேள்வி.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தின் மார்ச் வடிவம் குறித்து தங்களால் முன்வைக்கப்பட்ட அவதானங்களை அரசாங்கம் கவனத்தில் எடுக்கவில்லை என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விசனம் தெரிவித்திருப்பது கவனிக்கத்தக்கது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. ஆனால், அதே வேளை ஒன்லைன் பாதுகாப்புச் சட்டமூலத்தை பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் கடந்த செவ்வாய் கிழமை சபையில் சமர்ப்பித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைப் போன்றே ஒன்லைன் பாதுகாப்புச் சட்டமூலமும் பொதுவெளியில் பெரும் விவாதத்தை மூளவைத்திருக்கிறது. சமூக ஊடகங்களை ஒழுங்கமைப்பதை நோக்கமாகக் கொண்டே இந்தச் சட்டமூலத்தைக் கொண்டு வந்திருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால், சட்டமூலம் இணையத்தை அரசியல் தொடர்பாடல் நோக்கங்களுக்கு பயன்படுத்துவதை கட்டுப்படுத்தும் ஆபத்தைக் கொண்டிருப்பதாக எதிரணி அரசியல் கட்சிகளும், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களும் சுட்டிக்காட்டுகின்றன.

ஊடக சுதந்திரத்தை இந்தச் சட்டமூலம் பாரதூரமான ஆபத்துக்குள்ளாக்கும் என்று ஊடகத்துறை அமைப்புக்கள் பலவும் கவலை வெளியிட்டிருக்கின்றன சட்டமூலத்தை கணிசமானளவுக்கு மாற்றியமைக்க வேண்டும் அல்லது முற்றாகவே கைவிடவேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு மத்தியில் அரசாங்கம் அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறது. எதிர் பார்க்கப்பட்டதைப் போன்று, அன்றைய தினமே சட்டமூலத்தின் அரசியலமைப்புப் பொருத்தப்பாடு குறித்து கேள்வியெழுப்பி அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் முதல் மனுவை ஊடகவியலாளர் ஒருவர் தாக்கல் செய்திருக்கிறார். அரசியல் கட்சிகள், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களினால் மேலும் பல மனுக்கள் தாக்கல் செய்யப்படும் என்பது நிச்சயம்.

ஒன்லைன் பாதுகாப்புச் சட்டமூலம் இணையத்தள உள்ளடக்கங்களின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து உறுதிப் படுத்தும் பணிக்காக ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமிப்பதற்கான ஏற்பாட்டைக் கொண்டிருக்கிறது. எந்தவொரு சமூக ஊடகக் கணக்கையும் இணையப் பிரசுரங்களையும் தடைசெய்வதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு அதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஆணைக்குழு சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்லைன் குற்றச்செயல்களுக்கு சிறைத் தண்டனையையும் கூட சிபாரிசு செய்யமுடியும்.

கடந்த வருடம் அக்டோபரில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 21ஆவது திருத்தத்தின் பிரகாரம் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப் பினர்களை அரசியலமைப்பு பேரவை சிபாரிசு செய்வதற்கு வகைசெய்யும் ஏற்பாட்டுக்கு புறம்பாக ஒன்லைன் பாதுகாப்பு விவகாரத்தில் ஆணைக்குழு உறுப்பினர்கள் ஐவரையும் நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்படுகிறது. அதனால், ஆணைக்குழுவின் சுயாதீனம் குறித்து வலுவான சந்தேகம் எழுகிறது.

உத்தேச ஆணைக்குழுவின் தலைவரையும் உறுப்பினர்களையும் ஜனாதிபதி நியமிக்கும் ஏற்பாட்டைச் சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதி தானே தெரிவுசெய்து நியமிக்கும் ஒரு குழுவினரின் ஊடாக சமூக ஊடகங்களில் மக்கள் செய்யும் பதிவுகளை கட்டுப்படுத்த முயற்சிக்கிறார் என்று குற்றஞ்சாட்டுகிறார். இணையத்தை அடிப்படையாகக் கொண்ட தகவல் பரிமாற்றச் சேவைகளைப் (Internet based communication services) பயன்படுத்துகிறவர்களினால் காணப்படுகின்ற, கேட்கப்படுகின்ற அல்லது உணரப்படுகின்ற எதையும் 'உண்மை' (Fact) என்று சட்டமூலம் வரைவிலக்கணம் செய்கிறது.

அவமதிப்புக்கு நிகரான பொய்யான வாசகங்கள் (False statements) தொடக்கம் அமைதியைக் குலைக்கும் நோக்குடன் பொய்யான வாசகத்தின் மூலம் திட்டமிட்ட முறையில் நோக்கத்தோடு அவமதிப்பைச் செய்வது வரை தண்டனைக்குரிய பல்வேறு குற்றச்செயல்கள் சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

13ஆம் பக்கம் பார்க்க...

வீரகத்தி தனபாலசிங்கம்



# இனவழிப்பு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழருக்கு ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்கள் இதுவரை வழங்கியது என்ன?

இலங்கை அரசானது தனது சொந்த மக்களான தமிழர்கள் மீதும், சிங்களவர்கள் மீதும் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரான காலத்தில் மிகவும் கொடூரமான கொலைகளைப் புரிந்திருக்கிறது. இதன் உச்சகட்டமே 2009 மே மாதம் தமிழர்கள் மீது அது நடத்திய படுகொலைகள். இப்போரில் குறைந்தது 146,679 தமிழர்கள் காணாமற்போயும், 90,000 பேர் விதவைகளாக உருவாகியும், 25,000 பேர் அநாதைகளாக உருவாக்கப்பட்டும், 160,000 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டும் இருப்பதோடு, தமிழர்களின் தாயகமான 18,000 சதுரக் கிலோமீட்டர் நிலத்தில் குறைந்தது 8,000 சதுரக் கிலோமீட்டர் பரப்பளவு சிங்கள ராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையினால் உருவாக்கப்பட்ட மூவர் அடங்கிய நீதிபதிகள் குழு இறுதி யுத்தத்தில் குறைந்தது 40,000 தமிழர்களாவது கொல்லப்பட்டிருக்கலாம் என்று கணிப்பிட்டிருக்கிறது. அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் வல்லுனரான சார்ள்ஸ் பெட்ரியின் கருத்துப்படி இவ்வெண்ணிக்கை குறைந்தது 70,000 ஆவது இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இலங்கையின் வடக்கு மாகாணமே உலகில் மிகவும் ராணுவ மயப்படுத்தப்பட்ட பிரதேசம் என்று கணிக்கப்பட்டிருப்பதோடு, யுத்தம் முடிந்த இத்தனை ஆண்டுகள் கடந்த நிலையிலும் கூட நிலைமை அப்படியே தான் இருக்கிறது.

ஆயிரக்கணக்கான தமிழர்கள் இன்றுவரை தமது வாழ்விடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். இன்னும் பல நூற்றுக்கணக்கான அப்பாவிகள் காரணமின்றி சிறைகளில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இப்படியான நிரூபிக்கப்பட்ட சாட்சியங்களும், தமிழர்களின் அவலமும் உலகின் கண்களுக்குத் தெரிவதில்லை. ஏனென்றால், இந்தத் தமிழர்களைக் கொண்டு தமக்கு அரசியல் ரீதியிலான எந்த நண்மையையும் பெற்றுவிட முடியாதென்று அனைத்து நாடுகளும் இவர்களைக் கைகழுவிவிட்டன.

தாயகத்திலும், புலம்பெயர்ந்து வாழும் சமூகங்களிலும் இருக்கும் தமிழர்களுக்கான ஒரே ஆறுதலான விடயம் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைக் கவுன்சில் இவர்களது ஆதங்கங்களைக் கையிலெடுத்து இவர்களுக்காக வாதாட முன்வந்ததுதான். அதுகூட, பல மனிதவுரிமை அமைப்புகளின் இடைவிடாத அழுத்தத்தின் மூலமே சாத்தியமாகியது என்பது உண்மை. ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டதே பாதிக்கப்படும் மக்களின் நலன்களைக் காப்பதற்காகத்தான். ஆனால், இன்றோ, அது இலங்கையாகட்டும், சிரியாவாகட்டும், தலையிடுவதுமில்லை, மக்களைக் காப்பதுமில்லை. அங்கத்துவ நாடுகளின் ஆள்புல ஒருமைப்பாட்டில் தலையிடுவதில்லை என்பதைக் காரணம் காட்டிக்கொண்டு அது வாளாவிருக்கிறது.

மனிதவுரிமைகளைக் காப்பதும், அப்பாவிகளைப் பாதுகாப்பதும் எவ்வாறு ஒரு நாட்டின் ஒருமைப்பாட்டைச் சிதைக்கும் என்று ஐக்கிய நாடுகள் சபை இதுவரை தெளிவான பதில் எதையுமே தரவில்லை. நாட்டின் தேசிய பாதுகாப்பு என்கிற பெயரில் 99.99 வீதம் சிங்களவர்களைக் கொண்ட இலங்கை அரச ராணுவம் மிகக் கொடூரமான முறையில் தனது நாட்டின் ஒரு மக்கள் பிரிவின் மீது பாரிய போர்க்குற்றங்களை கட்டவிழ்த்துவிட்டிருக்கிறது.

2009 இலிருந்து இதுவரையில் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதில் முதலாவது பிரேரணை, உலகிலேயே முதன் முதலில் தீவிரவாதத்தை முற்றாக ஒழித்தமைக்காக இலங்கையைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாகக் கொண்டுவரப்பட்டது. இலங்கையில் மிக ஆளமாக காலூன்றியிருந்த சீனாவை அகற்றும் நோக்கிலேயே அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைகளைத் தூக்கிப் பிடிக்கின்றன என்றும், அதனாலேயே இலங்கையில் ஆட்சிமாற்றம் ஒன்றினை ஏற்படுத்த முயன்றன என்றும் பரவலாகக் கணிக்கப்படுகிறது.

2012 மற்றும் 2013 ஆகிய வருடங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இலங்கை தனது விருப்பத்திற்கமைய விசாரணைகளை நடத்தலாம் என்று கூறுகிறது. அப்படி இலங்கை செயற்படத் தவறுமிடத்து, 2014 ஆம் ஆண்டின் தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை கவுன்சில் தனது விசாரணை அமைப்பொன்றை நிறுவ முடியும் என்று பரிந்துரை செய்திருந்தது. ஆனால், இதன் தொடர்ச்சியாக நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டிய அடுத்த தீர்மானம் சுமார் 6 மாதங்களுக்குப் பிற்போடப்பட்டதுடன், புதிய ஜனாதிபதிக்கு அவகசாம் வழங்கவேண்டும் என்றும் கூறப்பட்டது. ஆனால், இன்றுவரை எந்தவிதமான விசாரணைகளையும் இலங்கை ஆரம்பிக்கவுமில்லை. அதுபற்றிப் பேசுவதுமில்லை.

2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை அமைப்பு வெளியிட்ட அறிக்கையின்படி, தமக்கு இலங்கைக்குள் நுழையும் அனுமதி இதுவரை வழங்கப்படவில்லையென்றும், ஆட்சிமாற்றத்தின் பின்னரும் கூட இதே நிலைதான் என்றும் கூறுகிறது. சர்வதேச பிணக்குகள் அமைப்பு அண்மையில் வெளியிட்ட இலங்கை தொடர்பான அறிக்கையின்படி பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

இலங்கையில் பல்லாயிரக் கணக்கான படுகொலைகள் மற்றும் காணாமல்ப் போதல்கள் நிகழ்ந்திருந்தாலும்கூட, நடத்தப்பட்ட அனைத்து விசாரணைகளும் தோல்வியிலேயே முடிந்துள்ளதாகவும், இதுவரையில் வெறும் 5 ராணுவ வீரர்கள் வரையிலேயே குற்றம்காணப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறுகிறது. மேலும், ராணுவத்தின் அதிகாரிகள் எவருமே இதுவரையில் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவில்லை என்றும் அது கூறுகிறது. பாரிய படுகொலைகள், ஆட்கடத்தல்களில் ஈடுபட்ட ராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்களுக்கு விசாரணைகளிலிருந்து முற்றான விலக்கும், அதிகாரிகளுக்கு பாதுகாப்பும் அரசினால் வழங்கப்பட்டிருப்பது தெளிவாகிறது. தமிழர்களின் தாயகத்தில் செயற்படும் ஊடகவியலாளர்கள் மற்றும் மனிதவுரிமைவாதிகள் தொடர்ச்சியாக ராணுவத்தினால் அச்சுறுத்தப்பட்டும், சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டும் வருகிறார்கள். பாரிய படுகொலைகளைப் புரிந்த ராணுவ வீரர்களுக்கெதிராக பொலிஸாரினால் தாக்கல்செய்யப்பட்ட வழக்குகள் ராணுவத்தினால் கடுமையாக எதிர்க்கப்பட்டு கிடப்பில் போடப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட சாட்சிகளுக்கான பாதுகாப்பு எனும் திட்டத்தினை அமுல்படுத்துவதில் தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்பட்டு வருகிறது.

இலங்கை சர்வதேச மனிதவுரிமைச் சட்டங்களுக்கெதிராக இழைத்திருக்கும் மிகப்பாரிய அளவிலான போர்க்குற்றங்களையும், மனித குலத்திற்கெதிரான குற்றங்களையும் உள்நாட்டில் விசாரிப்பதற்கான சட்ட அமைப்புகளோ, வசதிகளோ இல்லாத நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடென்கிற வகையில், சுதந்திரமான விசாரணை ஒன்றினை மேற்கொள்வது அவசியமாகிறது. ஆனாலும், 2015 ஆம் ஆண்டின் தீர்மானத்தின் நகலானது போர்க்குற்றம் என்பதையோ மனித குலத்திற்கெதிரான குற்றம் என்பதையோ குறிப்பிட மறுப்பதுடன், குற்றங்களின் வீரியத்தையும் வேண்டுமென்றே குறைத்து மதிப்பிடும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

நகல் தீர்மானம் வடிவமைக்கப்பட்டுள்ள விதத்தினைப் பார்க்கும்பொழுது, இலங்கையரசை எந்த விதத்திலும் கோபப்படுத்தாத முறையில், மிகவும் மென்மையான போக்குடன் அமெரிக்காவினால் இத்தீர்மான நகல் வடிவமைக்கப்பட்டிருப்பது அப்பட்டமாகத் தெரிகிறது. ஒருவகையில், இத்தீர்மானம் இலங்கையைக் குற்றம்சாட்டுவதைத் தவிர்த்து, உற்சாகப்படுத்தும் விதமாகவே வரையப்பட்டுள்ளதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

தனது நகல் தீர்மானத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை கடுமையாக விமர்சித்திருந்த அதேவேளை, இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பாக இலங்கை செய்வதாக ஒப்புக்கொண்ட விசாரணைப் பொறிமுறையினை பெரிதும் வரவேற்றும் எழுதியிருந்தது. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவே போர்க்காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தார் என்பது மட்டுமல்லாமல், அவரை விசாரிக்கும் அதிகாரம் நாட்டில் வேறு எவருக்குமே இல்லையென்பது நாம் அறியாதது அல்ல. எந்தவித காலக் கெடுவும் இல்லாமல் வெறுமனே பாராட்டுகிறோம், வேண்டிக்கொள்கிறோம், என்று முடிக்கப்பட்ட இந்தத் தீர்மானத்தின் மூலம் தமிழருக்கு எந்தவிதமான நீதியும் கிடைக்கப்போவதில்லை என்பதே உண்மையாகும்.

விடுதலைப் புலிகளை கடுமையாகச் சாடும் அமெரிக்காவின் இந்த நகல், அரசாங்கத்தைப் பாராட்டுவதுடன், போர்க்கைதிகளாக பிடிக்கப்பட்ட விடுதலைப் புலி வீரர்களை விசாரணைகள் என்கிற பெயரில் இலங்கையரசு சித்திரவதைகள் செய்து தண்டித்துவருவதைப் பற்றி சிறிதளவேனும் நகலில் குறிப்பிடவில்லை.

விசாரணைகளிலிருந்து அரச அதிகாரிகளுக்கும், ராணுவ வீரர்களுக்குமான விலக்கு, பாரிய மனிதப் படுகுழிகள், வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டவர்கள், பாரிய சித்திர வதைகள், பாலியல் வன்கொடுமைகள், வெள்ளை வான் கடத்தல்கள், படுகொலைகள் என்கிற சரித்திரத்தைக் கொண்ட இலங்கையில், போர்க்குற்றங்களுக்கான சாட்சிகளின் பாதுகாப்பு எவ்வாறு அமைக்கப்படவேண்டும் என்பது பற்றிய எந்தவித அழுத்தத்தையும் இந்த தீர்மானம் கொடுக்கவில்லை.

தமிழ் மக்களின் வாழ்விடங்களான சுமார் 67,000 ஏக்கர் நிலப்பரப்பில் வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்துக் குடியிருக்கும்சிங்களராணுவம் இதுவரையில் சுமார் 1,000 ஏக்கர்களை மட்டுமே மக்கள் பாவனைக்கென்று மீள வழங்கியிருக்கிறது. உயர் பாதுகாப்பு வலயம் என்கிற போர்வையில் கடந்த 3 தசாப்தங்களாக ராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் தமிழர்களது வாழ்விடங்கள் மீளவும் தமிழர்களிடம் கையளிக்கப்படும் என்கிற எந்த உத்தரவாதமும் இதுவரைக்கும் வழங்கப்படவில்லை. தீர்மானத்தின்படி, 2002 இலிருந்து 2012 வரையான காலப்பகுதியில் நடந்த போர்க்குற்றங்கள் பற்றி மட்டும்தான் விசாரிக்கப்படவேண்டும் என்று கூறப்படுவதன் மூலம், சிங்கள ராணுவத்தினால் 1983 ஆம் ஆண்டிலிருந்து 2002 வரையான காலப்பகுதியில் திட்டமிட்ட வகையில் தமிழர் மீது நடத்தப்பட்ட படுகொலைகளை விசாரிப்பது பற்றி அதில் எதுவுமே சொல்லப்படவில்லை.

இனிமேல் ஜெனீவாவில் கொண்டுவரப்படவிருக்கும் தீர்மானங்களும் இலங்கை அரசை எதுவும் செய்யப்போவதில்லை. எந்தவித அழுத்தங்களும் தமக்கு இத் தீர்மானங்களால் இருக்கப்போவதில்லை என்று இலங்கை அரச மட்டம் நம்புகிறது. இதனாலேயே அண்மையில் இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையில் சர்வதேச விகாரணை என்ற ஒன்றே கிடையாது என அடித்துக் கூறியிருக்கிறார். இதன் மூலமாக சிங்கள அரசினாலும், ராணுவத்தினாலும் அநியாயமாகக் கொல்லப்பட்ட அப்பாவி தமிழ் மக்களுக்கான நீதி இலங்கையில் மாத்திரமல்ல, சர்வதேச ரீதியாகவும் கிடைக்குமா என்கிற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது.

மறவன்



# பிராந்திய செய்திகள்



## புகையிரத நேர அட்டவணையில் மாற்றம்



நேற்று (21) முதல் வடக்கிற்கான புகையிரத நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி யாழ்தேவி புகையிரத சேவை உட்பட ஏனைய புகையிரதங்களின் ஆரம்ப நேரம் மாற்றப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிற்பகல் 1.40 மணிக்கு காங்கேசந்துறையில் இருந்து கொழும்பு கோட்டை மற்றும் கல்கிஸ்சை வரை பயணித்த யாழ்தேவி புகையிரதம் நேற்று முதல் காலை 10 மணிக்கு காங்கேசந்துறை நிலையத்தில் இருந்து புறப்பட்டதாக புகையிரத திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சனிக்கிழமை அதிகாலை 5.20 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரை பயணித்த புகையிரதத்தின் நேரம் காலை 5.30 ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், பொல்கஹவெலயில் இருந்து மஹவ சந்தி வரை காலை 5.30 க்கு செல்லும் தினசரி புகையிரதத்தின் நேரம் காலை 5.25 ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக குருநாகலில் இருந்து காலை 8.55 க்கு மஹவ சந்தி வரை செல்லும் தினசரி புகையிரதத்தின் நேரம் காலை 9.15 ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் 36 ஆவது நினைவு தினம்



இந்திய இராணுவத்தினரால் சுட்டு படுகொலைசெய்யப்பட்ட யாழ்போதனா வைத்தியசாலை பணியாளர்களின் 36 ஆவது நினைவு தினம் நேற்று (21) நினைவு கூறப்பட்டது.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியசாலை பணியாளர்கள் 21 பேர் உள்ளிட்ட 68 பேர் சுட்டு படுகொலை செய்யப்பட்டதுடன் பலரும் காயமடைந்தனர். சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் 36 ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்றைய தினம் நினைவு கூரப்பட்டது.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், சுட்டு படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் நினைவேந்தலில் கலந்து கொண்டிருந்தனர். குறித்த நினைவேந்தலில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு உயிரிழந்தோருக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு உயிரிழந்தவர்களின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு நினைவுச் சுடர் ஏற்றப்பட்டது.

## சர்வதேச விமான நிலையம் தொடர்பில் வெளியான தகவல்




யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஆரம்பித்து நான்கு வருடங்கள் கடந்துள்ள போதிலும் உட்கட்டமைப்பு வசதிகள், அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக இந்தியா மற்றும் கொழும்பு இடையேயான பயணிகள் சேவைகள் இடம்பெற்று வருவதுடன் பெருமளவானவர்கள் அதனை பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போதைய விமான நிலையத்தில் விமானம் ஊடாக வருபவர்களை அழைத்து வர செல்பவர்கள் காத்திருப்பதற்கான இடம் மர நிழலேயாகும். மரங்களுக்கு கீழே கல்லாசனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோடை காலத்தில் அவை பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் மாரி காலத்தில் மழை பெய்தால் கல்லாசனங்களில் இருக்க முடியாது பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றனர்.

குறிப்பாக பயணிகள் குடிவரவு, குடியகல்வு செயற்பாடுகளை முடித்துவிட்டு காத்திருப்பதற்கான போதிய இடம் இல்லாமல் அவர்களும் இதே பிரச்சினையை முகம்கொடுக்கின்றனர். தற்போது மாரி காலம் ஆரம்பித்துள்ள நிலையில் விமான நிலையத்தை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக தென்னிந்திய பிரபலங்கள் அதிகம் பேர் வருகை தருகின்றனர்.

இவ்வாறான நிலையில் ஒரு சில உட்கட்டுமான அடிப்படை வசதிகளையாவது ஏற்படுத்துவது பயணிகள் மற்றும் விமான நிலையத்திற்கு வருபவர்களுக்கு சௌகரியத்தை ஏற்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது. குறித்த விடயம் தொடர்பில் உள்ளூர் அரசியல்வாதிகள் முதல் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம், இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை ஆகியோர் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

## மத்திய முகாம் விகாரையில் சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி 200 மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டம்



இயற்கையால் ஆசீர்வதிக்கப்பட்ட அழகிய இலங்கை தேசத்தில் மரங்களை வளர்ப்பதன் மூலம் காலநிலையை சீராக பேண முடியும். இயற்கை வளங்களை அழிப்பதன் மூலம் நாடு மட்டுமல்ல நாமும் சீரழிந்துவிடுவோம். இறைவனின் படைப்பில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அழகும் பயனும் என்றால் மரம் அதன் உச்ச வடிவம். மரங்களை வெட்டுவதால் எமது எதிர்காலத்தை நாமே பழுதாக்கி கொள்வதற்கு ஒப்பானதாகும் என இலங்கை அடிப்படை மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.ஏ.நளீர் தெரிவித்தார்.

இயற்கையை நேசித்து சமூக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீ அவர்களின் எண்ணத்தின் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட மரநடுகை நிகழ்வு நேற்று (21) மத்திய முகாம் நகர லும்பினி பௌத்த விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சுமித் தேரர் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

200 மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டத்தை தொடக்கிவைக்கும் வகையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலங்கை அடிப்படை மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.ஏ.நளீர், மத்திய முகாம் பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எம். கபூர், மத்திய முகாம் பொலிஸ் பிரிவின் சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர் எம்.எச்.லத்திப் ஹாஜி ஆகியோரும் கலந்துகொண்டனர். (நூருல் ஹுதா உமர்)

## பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக சம்மாந்துறை மக்களின் போராட்டம்



பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக "சம்மாந்துறை மக்களின் அழுகை குரல்" எனும் தொனிப்பொருளில் துஆ பிராத்தனை (20) சம்மாந்துறையில் ஹிஜ்றா சந்தியில் இடம்பெற்றது. பலஸ்தீன் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான யுத்தம் பத்து நாட்களைக் கடந்து தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்ற நிலையில் யுத்தத்தினால் இதுவரையில் பல ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவாக சம்மாந்துறையில் ஒன்று கூடிய பொது மக்கள் ஹிஜ்றா சந்தியில் கொட்டும் மழையில் துஆ பிராத்தனையில் ஈடுபட்டு அமைதியான முறையில் கலைந்து சென்றதுடன் ஹிஜ்றா சந்தியில் இலங்கை மற்றும் பலஸ்தீன் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளதோடு சம்மாந்துறை மக்களின் அழுகைக்குரல் எனும் ஆதரவு பதாதையும் தொங்கவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பாறுக் ஷிஹான்)

## மாங்குள தொடருந்து சேவையை விஸ்தரிக்க வேண்டும்

மாங்குளம்தொடருந்துசேவையைவிஸ்தரித்தால்மாவட்டமக்கள்நன்மையடைவார்கள் என முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார். மாங்குளம் தொடருந்து நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், "வடமாகாணத்திலே ஐந்து மாவட்டங்கள் இருக்கின்றது. அவற்றில் பெரிய மாவட்டமாக இருப்பது முல்லைத்தீவு மாவட்டமாகும். இம் மாவட்டத்தில் ஒரேயொரு தொடருந்து நிலையமாக மாங்குளம் தொடருந்து நிலையமே இருக்கின்றது. ஏனைய தொடருந்து நிலையங்களுடன் ஒப்பிடும் போது சேவை வசதிகள் மிகவும் குறைவான நிலையிலே காணப்படுகின்றது.

அதனை உணர்ந்துகொண்டு தொடருந்து நிலைய அதிபர்கள் தம் முயற்சியினால் மக்களுக்கு நல்ல முறையில் சேவை வழங்கக்கூடிய தொடருந்து நிலையமாக அதனை மாற்ற முயற்சித்திருக்கின்றார்கள். அங்கே நூலக வசதி, சுத்தமான குடிநீர் வசதி போன்ற நல்ல விடயங்களை செய்திருக்கின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் ஆசன ஒதுக்கீட்டை முற்பதிவு செய்ய வேண்டுமாக இருந்தால் கிளிநொச்சிக்கு அல்லது வவுனியாவிற்கு சென்றே பதிவினை மேற்கொள்கிறார்கள். குறித்த வசதி மாங்குளத்தில் அமையப்பெறுமிடத்து மாவட்ட மக்களுக்கு அது அனுகூலமாக அமையும். வாகன ஒதுக்கீட்டினை முற்பதிவு செய்வதற்குரிய வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதனைவிட சாதாரண தொடருந்துகள் நிறுத்தி சென்றாலும் அதிவேக தொடருந்துகள் குறித்த தொடருந்து நிலையத்தில் நிறுத்துவதில்லை. அதிவேக தொடருந்துகள் நிறுத்தப்பட வேண்டும்.

வாகனங்களின் இட ஒதுக்கீடு மற்றையது அதிவிரைவு தொடருந்தை மாங்குளத்தில் நிறுத்துவதற்கான முயற்சிகளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் தீர்மானமாக எடுத்து கொழும்பிலுள்ள தொடருந்து அதிபர்களுக்கும், ஜனாதிபதி செயலகத்திற்கும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாகவும் அவ்விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அவ்விரு சேவைகளும் மாங்குளம் தொடருந்து நிலையத்திற்கு கிடைக்குமிடத்து முல்லைத்தீவு மாவட்ட மக்கள் இன்னும் பெரிதும் நன்மையடைவார்கள்." என தெரிவித்துள்ளார்.

# சினி துளிகள்






## சம்பளத்தை உயர்த்திய நடிகை நயன்தாரா

நயன்தாரா தமிழ் சினிமாவில் லேடி சூப்பர் ஸ்டார் என்ற பட்டத்தோடு கொண்டாடப்படுபவர். தென்னிந்திய சினிமாவை கலக்கிவந்த இவர் இப்போது பாலிவுட் பக்கம் சென்றுள்ளார். அங்கு முன்னணி நடிகரான ஷாருக்கான் நடித்த ஜவான் திரைப்படத்தில் நாயகியாக நடித்து ஹிந்தி பட ரசிகர்களையும் கவர்ந்துவிட்டார்.

"ஜவான்" படம் ரூ.1,100 கோடிக்கு மேல் வசூல் செய்து இந்தி திரையுலகினரை ஆச்சரியப்பட வைத்துள்ளது. நயன்தாரா நடிப்புக்கும் பாராட்டுகள் கிடைத்தன. ஜவான் படத்தை தொடர்ந்து ஹிந்தி பட இயக்குனரும், தயாரிப்பாளருமான சஞ்சய் லீலா பன்சாலி பெரிய பட்ஜெட்டில் எடுக்க உள்ள பைஜு பாவ்ரா என்ற படத்தில் ரன்பீர் கபூர் மற்றும் ஆலியாபட் நடிக்க இருக்கிறார்கள்.

இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க வைக்க நயன்தாராவிடம் பேச்சுவார்த்தை நடப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. ஜவான் படத்தின் மூலம் ஹிந்தி சினிமாவில் காலடியெடுத்து வைத்துள்ள நயன்தாரா அப்படத்திற்காக ரூ.10 கோடி சம்பளம் பெற்றுள்ளாராம். எனவே அடுத்து நடிக்க பேச்சு வார்த்தையில் இருக்கும் சஞ்சய் லீலா பன்சாலி படத்திற்காக நயன்தாரா ரூ. 13 கோடி சம்பளம் கேட்டுள்ளாராம். அதற்கும் படக்குழு ஒப்புக்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

## லியோ படத்தில் நடிகை வனிதாவின் மகன்



லோகேஷ் கனகராஜ் விக்ரம் பட பிரம்மாண்ட வெற்றியை தொடர்ந்து இயக்கியுள்ள திரைப்படம் தான் லியோ. விஜய்-த்ரிஷா இருவரும் நீண்ட இடைவேளைக்கு பிறகு ஜோடி சேர்ந்து நடித்துள்ளார்கள். அதுவே ரசிகர்கள் படத்தை பெரிதும் எதிர்பார்த்தார்கள் என்றே கூறலாம்.

அனிருத் இசை படத்திற்கு கூடுதல் பலம், படு மாஸ ாக வெளியாகி வெற்றி நடைபோட்டு வருகிறது. இப்போதே 1 வாரத்திற்கான படத்தின் ப்ரீ புக்கிங்கும் நடந்துவிட்டது. இந்த நிலையில் பிக்பாஸ் புகழ் நடிகை வனிதா மகன் லியோ படத்தில் இருக்கிறார் என்ற தகவல் புகைப்படத்துடன் சமூக வலைதளங்களில் பேசப்படுகிறது.

படத்தின் கிளைமாக்ஸ் காட்சியில் நடிகர் விஜய் அர்ஜுனிடம் தான் லியோ இல்லை என்பதை நிரூபிக்க தன்னுடைய சில குடும்ப புகைப்படங்களை காண்பிப்பார், அதில் தனது மகனின் முதல் பிறந்தநாளின் போது எடுத்த புகைப்படம் என்று காண்பிப்பார். அந்த புகைப்படத்தில் இருக்கும் சிறுவன் வேறு யாரும் கிடையாது பிரபல நடிகையான வனிதா விஜயகுமாரின் மூத்த மகனான ஸ்ரீ ஹரிதான்.

## அஜித்துடன் கூட்டணி அமைத்த இயக்குனர் விக்னேஷ் சிவன்



சிம்புவை வைத்து போடா போடி என்ற படத்தை இயக்கியதன் மூலம் தமிழ் சினிமாவில் என்ட்ரி கொடுத்தவர் விக்னேஷ் சிவன். அதன்பிறகு தொடர்ந்து படங்கள் இயக்கி வந்தவர் நானும் ரவுடிதான் படம் இயக்கும் போது நயன்தாராவுடன் காதல் ஏற்பட திருமணமும் செய்துகொண்டார். அதன்பின் நயன்தாராவை வைத்து காத்து வாக்குல ரெண்டு காதல் படம் இயக்கினார். அதில் சமந்தாவும் இன்னொரு நாயகியாக நடித்தார்.

இப்படத்தை தொடர்ந்து விக்னேஷ் சிவன் அஜித்தின் 62வது படத்தை லைகா நிறுவனம் தயாரிப்பில் இயக்க இருந்தார். ஆனால் கடைசி நேரத்தில் அப்படம் அப்படியே டிராப் ஆக இப்போது மகிழ்திருமேனி இயக்கத்தில் அஜித் நடிக்கிறார். டிராப் ஆன பட தகவலுக்கு பிறகு விக்னேஷ் சிவன் இதுவரை எந்த ஒரு புதிய பட அறிவிப்பையும் வெளியிடவில்லை.

இந்த நிலையில் தான் கிரிக்கெட் உலகின் தல எம்.எஸ்.தோனியுடன் எடுத்த புகைப்படம் ஒன்றை விக்னேஷ் சிவன் வெளியிட்டு ஒரு செய்தியை வெளியிட்டுள்ளார். ஒரு விளம்பரத்திற்காக விக்னேஷ் சிவன் தோனியை இயக்கி இருக்கிறாராம். தான் கடவுளாக கருதும் ஒருவரை இயக்கிய வாய்ப்பு கிடைத்தது தன் வாழ்நாளில் மறக்க முடியாது என நெகிழ்ச்சி உடன் கூறி உள்ளார்.

## நடிகர் ராஜ்கிரணால் தினமும் அழுதுகொண்டே இருந்தேன்



நடிகை சங்கீதா, குழந்தை நட்சத்திரமாக சினிமாவில் அறிமுகமாகி கதாநாயகியாக சில திரைப்படங்களில் நடித்து பலரின் மனதை கொள்ளை கொண்டவர் தான் சங்கீதா. என் ரத்தத்தின் ரத்தமே என்ற படத்தின் மூலம் தமிழில் நடிக்க வாய்ப்பு கிடைத்து தனது பயணத்தை தொடங்கியவர் சாமுண்டி, தாலாட்டு, சரிகமபதநி, எல்லாமே என் ராசாதான், புள்ள குட்டிக்காரன், சீதனம், பூவே உனக்காக, காலம் மாறி போச்சு, அலெக்சாண்டர், கங்கா கௌரி என பல திரைப்படங்களில் நடித்திருந்தார்.

நான் 10ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது எல்லாமே என் ராசா படத்தில் கரடு முரடான தோற்றத்தில் இருப்பவருக்கு ஜோடியாக நடித்தேன். ராஜ்கிரண் சார் தான் எனக்கு ஜோடி, அந்த படத்தில் பெரிய பொண்ணு போல இருக்க வேண்டும் என்பதற்காக நான் கொஞ்சம் வெயிட் போட்ட பிறகு படப்பிடிப்பு துவங்க வேண்டும் என்றார்கள்.

அதனால் தினமும் ராஜ்கிரண் சார் அவர்களின் ஆபிஸில் இருந்து வாழைப்பழம், சாப்பாடு, ஐஸ்கிரீம், தயிர் என விதவிதமாக வரும். ஐஸ்கிரீம் வேண்டுமென்றால் நாம சாப்பிட்டுக் கொள்ளலாம். ஆனால் சாப்பாட்டை கொஞ்சமாதான சாப்பிட முடியும். ஆனால் அவர்கள் கண்டிப்பா அதிகமா சாப்பிடனும்னு கட்டாயப்படுத்தினாங்க. இதனால் சாப்பிட நான் மிகவும் கஷ்டப்பட்டு அழுதுகொண்டே சாப்பிட்டேன் என கூறியுள்ளார்.

## எனக்கு திருமணம் ஆகாமல் போக இது ஒன்று தான் காரணம்

கவர்ச்சியாக பல படங்களில் நடித்து பாப்புலர் ஆனவர் சோனா. அவர் வடிவேலு உள்ளிட்ட காமெடி நடிகர்களுடனும் ஜோடியாக நடித்து இருக்கிறார்.

தற்போது சோனா அவரது வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை வைத்து ஸ்மோக் என்ற வெப் சீரிஸை இயக்கி வருகிறார். அவர் சந்தித்த வலிகள், பிரச்சினைகள் என அனைத்தையும் அந்த கதையில் கூறி இருக்கிறாராம்.

பிரஸ் மீட்டில் பேசிய சோனா அவருக்கு ஏன் திருமணம் ஆகவில்லை என்ற காரணத்தையும் கூறி இருக்கிறார். 'கவர்ச்சி நடிகை' என எல்லோரும் என்னை அழைத்ததால் தான் எனக்கு திருமணம் கூட ஆகவில்லை. சினிமாவில் நடித்தால் அப்படித்தான் என நினைத்துவிட்டார்கள் எனவும் சோனா கூறியிருக்கிறார்.



## ரஜினி கோடி ரூபாய் சம்பளம் வாங்க காரணம் கமல் தான்

திரையுலகில் சக போட்டியாளர்களாகவும், நல்ல நண்பர்களாகவும் இருப்பது மிகவும் கடினமான விஷயம். அதை கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக செய்து வருகிறார்கள் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் மற்றும் உலக நாயகன் கமல் ஹாசன்.

இப்படி நெருங்கிய நண்பர்களாக இருக்கும் இவர்கள் இருவர் குறித்தும் பல சுவாரஸ்யமான, நாம் கேள்விப்படாத தகவல்கள் அவ்வப்போது வெளியாகும். அந்த வகையில் சூப்பரான தகவல் ஒன்று தெரியவந்துள்ளது.

சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் தமிழ் சினிமாவின் ஒரு காலகட்டத்தில் உச்சத்தில் இருந்தார். அந்த நேரத்தில் பல தயாரிப்பாளர்கள் அவருக்கு மிகவும் குறைவான சம்பளத்தை கொடுத்துள்ளனர்.

இதை கவனித்த கமல் உடனடியாக ரஜினியிடம் பேசியுள்ளார். நீங்கள் தற்போது சினிமாவின் உச்சத்தில் இருக்குறீர்கள். ஆனால், சில தயாரிப்பாளர்கள் உங்களை நன்றாக பயன்படுத்திக்கொண்டு குறைவான சம்பளம் தருகிறார்கள். அதனால் இனி நீங்கள் நடிக்கும் படங்களுக்கு ரூ. 1 கோடி சம்பளம் கேளுங்கள் என கமல் கூறியுள்ளார்.

கமல் கூறிய பின்பு தான் அடுத்தடுத்து நடிக்கும் படங்களில் ரஜினிகாந்த் ரூ. 1 கோடி சம்பளமாக வாங்கியுள்ளார். இந்த தகவலை பிரபல பத்திரிகையாளர் ஒருவர் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?





**சுழியோடி**

**22**

லீமா வீரச்சாவாம் என்ற செய்தி போராளிகளாலும் மக்களாலும் ஏற்றுகொள்ள முடியாத உண்மையாகிறது. செய்தியை கேள்விப்பட்டு மக்கள் கண்ணீர் வடித்தார்கள். ஊடகங்களிலும் இணையதளங்களிலும் இந்த செய்தி பின்னர் வெளியாகி உலகெங்கும் இருந்து அவரது இழப்பின் வேதனையை பகிர்ந்து கொண்டிருந்தனர் தமிழ் மக்கள்.

லீமாவின் இழப்பினால் விடுதலைப்புலிகள் மட்டுமல்ல ஆறாத்துயரில் அன்று வன்னி மக்களும் ஆழ்ந்தார்கள். எங்கும் சோக கீதங்கள் இசைக்கவிடப்பட்டன. புலிகளின் குரல் வானொலி சோகத்தை கொட்டியது. வீதிகள் எங்கும் சிகப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு லீமா அவர்களின் படங்கள் வைக்கப்பட்டு வணக்க நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகி இருந்தன. விடுதலைப்புலிகளின் கட்டமைப்பிற்குள் லீமா அவர்களின் வித்துடல் தியாகசீலம் கொண்டுசெல்லப்பட்டு அங்கு உடல் தூய்மையாக்கப்பட்டு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு தமிழீழ தேசிய தலைவரின் பார்வைக்காக வித்துடல் செல்கிறது.

அங்கு விடுதலைப்புலிகளின் அனைத்து தளபதிகளும் இருந்தார்கள். அங்கு தமிழீழ தேசிய தலைவர் மலர்மாலை சூட்டி வீரவணக்கம் செய்ததை தொடர்ந்து தளபதிகள் பொறுப்பாளர்கள் வீரவணக்கம் செலுத்தினார்கள். இதன்பின்பு வித்துடல் படைசார் வீர வணக்கத்திற்கும் மக்கள் வீர வணக்கத்திற்கும் வைக்கப்படுகிறது. இதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு இரகசியமான ஏற்பாடுகள் நடந்தேறுகின்றன.

முள்ளியவளை நீராவி பிட்டியிலிருந்த வீட்டிலிருந்து எடுத்து செல்லப்பட்டு ஒட்டிசுட்டான் வழியாக மாங்குளம் சென்று பின்பு மல்லாவி சென்று அதன் ஊடாக அக்கராயன் சென்று இஸ்கந்தபுரம் சென்று, கோணாவில், கிளிநொச்சி, பரந்தன், விஸ்வமடு, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு வழியாக மீண்டும் வித்துடல் முள்ளியவளையினை சென்றடைந்து, லீமா அவர்களின் வித்துடலினை பார்ப்பதற்காக மக்கள் வீதிகளில் மலர் மாலைகளுடன் குவிந்து நின்றார்கள்.

இரவிரவாக வித்துடல் நகர்ந்து சென்றது. இரவிரவாக வீதிகளில் காத்திருந்த மக்கள் வித்துடலுக்கு வணக்கம் செலுத்தினார்கள். சென்ற இடங்களிலெல்லாம் சிறப்பு வீரவணக்க நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், மக்கள் ஆகியோர் வீரவணக்கம் செலுத்தி உரை நிகழ்த்துகிறார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் துறைசார் பொறுப்பாளர்கள் கட்டளைத்தளபதிகள், பொறுப்பாளர்கள் அனைவரும் வீரவணக்கத்தில் லீமா அவர்களின் போராட்ட வரலாற்றினை எடுத்து கூறினார்கள். லீமா அவர்களின் வீரவணக்கம் வன்னியில் நடந்தேறி வித்துடல் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் முழுப்படையமதிப்புடன் விதைக்கப்பட்டது. இந்த நிலையில் அனைத்து உயர்மட்ட தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், மக்கள் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று இருந்தார்கள். முதற் தடவையாக இத்தனையாயிரம் பேர்களால் நிறைந்திருந்தது முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம். எல்லா போராளிகளையும் விம்மி அழவைத்துவிட்டு லீமா சென்றுவிட்டார். அவர் சென்றுவிடவில்லை ஒவ்வொரு தமிழ் மக்கள் மனங்களிலும் ஒவ்வொரு போராளிகளின் மனங்களிலும் என்றும் நிறைந்திருக்கிறார். அவர் கொடுத்த நினைவை சுமந்தபடி அவர் கொடுத்த விடுதலை உணர்வை சுமந்தபடி அவர் வளர்த்துவிட்ட போராளிகள் இன்னும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால் அவரது இழப்பு போராட்டத்திற்கு ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததை நாங்கள் பின்னர் கண்டுகொண்டோம் அதனை தொடர்ந்து வரும் தொடரில் பார்ப்போம்.

பால்ராஜ் அண்ணையின் இழப்பால் சோர்ந்து போயிருந்த உள்ளங்களுக்கு உற்சாகத்தை ஊட்டிய பெரும் வெற்றியை பெற்றுத்தந்த தாக்குதலாக சிறுத்தீவு தாக்குதல் அமைந்திருந்தது. ஈருடக படையணியின் இந்த நீண்ட தூரம் கடலில் சென்று தாக்குதல் நடத்திவிட்டு திரும்பி வருகின்ற வெற்றி செய்திகள் தமிழ் மக்களுக்கு உற்சாகத்தை கொடுத்த போதும் அது இந்தியாவிற்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தி இருந்தது.

கடற்புலிகளின் தாக்குதல்களை அவதானித்து வந்த இந்தியா இவ்வாறான தாக்குதலில் மேலும் ஆழமாக அவதானிக்க தொடங்கியது. (30) கிலோமீற்றர் தூரம் கடலில் சென்று தாக்குதல் நடத்திவிட்டு திரும்பும் கடற்புலிகளால் (36) கிலோ மீற்றர் கடல் எல்லையை கொண்ட இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான கடற்பரப்பில் எவ்வாறான தாக்குதலை நடத்த முடியும்என்று அவர்கள்(வேண்டாத) கற்பனைகளை வளர்த்திருக்க வேண்டும். இதன் காரணமாகத்தான் இந்திய இலங்கை கடல் எல்லையில் குண்டுகளை சிறிலங்கா கடற்படையினர் விதைத்து வைத்துள்ளதாக வெளியிடப்பட்ட செய்திகளை கொள்ள முடியும்.

ஆனால் சிறுத்தீவு கடற்படை தளம் தாக்குதல் மூலம் யாழ் குடாவின் மீது அதிக கண்காணிப்பு நடவடிக்கையை சிறிலங்கா கடற்படையினர் குவிப்பார்கள் என்ற நோக்கத்துடன்தான் இந்ததாக்குதல் முக்கியமாக விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்டது.

அதாவது தமது ஈருடக படையணிக்கான பயிற்சியை வழங்குவதுடன், இராணுவத்தை திசை திருப்பும் அல்லது அவர்களின் வளங்களை இன்னொரு பக்கத்திற்கு இழுத்து செல்லும் ஒரு நடவடிக்கையாகவும்தான் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் பனியில் தேள் கொட்ட, தென்னையில் நெறி கட்டிய கதையாக ஈருடக படையணியின் தாக்குதலால் இந்தியா தேவையில்லாமல் தனது அச்சத்தை அதிகரித்து கொண்டது. அல்லது அவ்வாறு காட்டிக்கொள்ள அதனை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி கொண்டது.

ஆனால் உண்மை அதுவல்ல சமாதான காலத்திற்கு பின்னர் சிறிலங்கா தமது படைவலுவை அதிகரிக்க தொடங்கிய நிலையில் அதனை பலப்படுத்தும் உதவிகளை இந்தியா வழங்கியிருந்தது. குறிப்பாக கடற்புலிகளை கட்டுப்படுத்தும் அவர்களின் செயற்பாடுகளை கண்டறிந்து உளவு சொல்லும் செயற்பாடுகளை இந்தியா போர் ஆரம்பிப்பதற்கு முன்னரே ஆரம்பித்துவிட்டது.

இந்தியாவின் இந்த சிறிலங்காவிற்கான இராணுவ உதவிகளையும் அவர்களின் விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு உதவிவரும் செயற்பாடுகளையும் போர் ஆரம்பித்ததன் (சமாதானத்திற்கு) பின்னர் அம்பலப் படுத்திய பெரும் பங்கு ஈருடக படையணிக்கே முதலில் உண்டு.

யாழ்குடா மீதான இவர்களின் தாக்குதலே இந்தியாவின் இராணுவ உதவிகளை அம்பலப்படுத்தி வைத்தது. எனவே ஈருடக படையணியின் தாக்குதல்களை தடுக்கவும் கட்டுப்படுத்தவும் மேலும் பல உதவிகளை இந்தியா வழங்கியிருந்தது.

அத்துடன் வான் தாக்குதல்களை கண்காணிக்க வவுனியாவிலும், தமிழகத்தின் கரையோரங்களிலும் கண்காணிப்பு நிலைகளை உருவாக்கியிருந்ததன் மூலம் விடுதலைப்புலிகளின் கடல், வான் தாக்குதலை தடுக்கும் முழுமையான பொறுப்பை இந்தியா எடுத்திருந்தது என்றே கொள்ளலாம்.

விடுதலைப்புலிகளின் பலம் வாய்ந்த இரு படையணிகளை கட்டுப்படுத்தும் பொறுப்பை இந்தியா நேரடியாக பொறுப்பேற்று இருந்ததை இதன் மூலம் புரிந்து கொள்ளலாம் இவை வெளியில் தெரிந்தவை.

இவ்விடயத்தில் வெளியில் வெளிவராத உண்மைகள் இன்னும் அதிகம். போராட்டத்தின் பின்னடைவிற்கு இவைகள்தான் காரணங்கள். எனினும் இறுதிவரை போராடும் முடிவில் விடுதலைப்புலிகள் இருந்தார்கள். கடைசி போராளி இருக்கும் வரை போராட்டம் தொடரும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். இதனால்தான் போர் முள்ளிவாய்க்காலில் முடியும்வரை அவர்கள் போராடினார்கள்.

யாழ்குடாவின் தீவுகள் மீது வெற்றிகரமாக தாக்குதல் நடத்திய ஈருடக படையணியின் அடுத்த தாக்குதல் மன்னார் கடற்படை தளங்கள் மீது செல்கிறது. வன்னியின் மேற்கே மன்னார் திருக்கேதீஸ்வரம் தொடக்கம் விடத்தல்தீவு, நாச்சிகுடா மிக நீண்ட (அண்ணளவாக), (80) முதல் (100) கிலோ மீற்றர் வரையான கடற்பரப்பு விடுதலைப்புலிகளின் ஆளுகைக்குள் காணப்பட்டது.

விடத்தல் தீவில் விடுதலைப்புலிகளின் கடற்படைத் தளம் ஒன்றும் காணப்பட்டது. அப்போது மன்னார் மாவட்டத்தின் கட்டளைத் தளபதியாக அச்சுதன் இருந்தார். அவரே அணியின் வேவு நடவடிக்கையின் கீழ் மன்னார் சிறுப்பிட்டி கடற்படைத்தளம் மீதான அடுத்தகட்ட தாக்குதலுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

தொடரும்...

# இலங்கையில் நடந்த ஈழப்போரில் இஸ்ரேல் யாருக்கு ஆதரவாக செயல்பட்டது?

கேள்வியின் பின்னணியில் உள்ள காலமும் இடமும் சரி இல்லையே!!! முன்பெல்லாம் ஒரு கேள்வியை திருத்துவதற்கான வழிமுறை தமிழ் கோராவில் இருந்தது. இப்போது அதை அகற்றி விட்டார்கள் போல் தெரிகிறது. இந்தக் கேள்வியை திருத்த முடியவில்லை.

இப்போது இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பயங்கரவாதிகள் இடையிலான போரில் பின்னணியில் இந்த கேள்வி எழுப்பப்படுவதாக இருந்தால் அது பின்வருமாறு அமைய வேண்டும். **இலங்கையில் நடந்த ஈழப் போரில் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன நாடுகள் யாருக்கு ஆதரவாக செயல்பட்டன?** ஆனால் மிக சாமர்த்தியமாக பாலஸ்தீனத்தை தவிர்த்து விட்டு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களும் சரி! தமிழ் தேசிய ஆதரவாளர்களும் சரி! ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். சர்வதேச அரசியல் புவிசார் அரசியலுக்கு உட்பட்டு தான் நகரும். பொதுவாக கேட்ட கேள்விக்கு எதிர்த் திசையில் இருந்து பதில் அளிப்பதை நான் விரும்பவில்லை என்ற போதிலும், இந்த கேள்வியின் ஒருதலைச் சார்பு காரணமாகவும் கேள்வியை திருத்த முடியாததாலும் இஸ்ரேல் பாலஸ்தீனத்தை இரண்டையும் ஒப்பிட்டு பதில் அளிக்கிறேன்.

தற்போதைய போர் தொடர்பாக இங்கு உலவும் பல கேள்விகளுக்கும் சேர்த்து எளிதில் விடையளிக்கிறேன். இந்தக் கருத்துக்கள் எல்லாம் இந்த கேள்வியை எழுப்பிய தமிழ் தேசிய ஆதரவாளர் மற்றும் இஸ்ரேல் பாலஸ்தீன் சிக்கலிலும் சரியான புரிதல் இல்லாத ஈழத்தமிழர்கள் அனைவருக்கும் தான். இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய அரச பயங்கரவாதத்தால் நிகழ்த்தப் பெற்ற இனப்படுகொலையான ஈழத் தமிழருக்கு எதிரான போரில் இஸ்ரேல் - பாலஸ்தீனம் ஆகிய இரண்டு நாடுகளுமே பங்களிப்பை செய்துள்ளனர் என்றாலும், அதில் நுட்பமான வேறுபாடுள்ளது.

இஸ்ரேல் குதிரை பந்தயத்தில் பணம் கட்டும் பண்ணையார் மனப்பான்மையைக் கொண்ட தேசம். வெற்றி பெறும் குதிரையை தேர்ந்தெடுத்து பணம் கட்டும். ஒருவேளை போரில் விடுதலைப் புலிகளின் கை வலுவாக ஓங்கியிருந்தால் அவர்களுக்கு உதவுவார்கள். அரச படைகள் ஓங்கியிருந்தால் அவர்களுடன் நட்பு கொள்வார்கள். அப்படித்தான் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அல்லது ஒரே நேரத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள ராணுவத்திற்கும் இஸ்ரேல் பயிற்சி வழங்கியது.

ஆனால் பாலஸ்தீனியர்கள் அப்படியல்ல. யாசர் அராபத் கூட ஏதோ கருத்தியலாகவாவது ஈழத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கு ஆதரவாக இருந்தார். ஆனால் அவரின் பின்னரான பாலஸ்தீனம் தமிழ் இனப்படுகொலை நிகழ்வதற்கான ஆதரவை முழு மூச்சுடன் வழங்கியது. ராஜபக்சேவின் இனப் படுகொலைகள் உலகின் பொதுவெளிக்கு தெளிவாகக் கொண்டு வரப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்த பின்னும்,






அந்த இனப்படுகொலைக்கு ஆதரவாக விருது வழங்கி கௌரவித்த இரண்டு நாடுகள் கியூபா மற்றும் பாலஸ்தீன்தான். அதுவும் தன் நாட்டின் பகுதிக்கு ராஜபக்சேவின் பெயரை வைத்த ஒரே வெளிநாடு பாலஸ்தீன்தான்.

தமிழ் ஈழ இனப்படுகொலை பல்வேறு மனித உரிமை அமைப்புகளால் சான்றுடன் அம்பலப்படுத்தப்பட்ட பின், ஐ.நாவில் உப்புசப்பில்லாத ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது அமெரிக்கா. தமிழர் மேல் உள்ள அக்கறையில்லை. ஆயுத அரசியல் தான் அமெரிக்க நோக்கம். ரஷ்யா – சீனா மட்டுமன்றி, அனைத்து அரபு நாடுகளும் அதை எதிர்த்தே வாக்களித்தன. பாலஸ்தீன் உறுப்பினர் இல்லை என்பதால் அரபு கூட்டமைப்பை இலங்கை அரசு ஆதரவு நிலை எடுக்க வற்புறுத்தியது. போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் கழித்து, பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் வெல்வது பற்றிய இலங்கை அரசின் பயிற்சி வகுப்புகளில் ஹமாஸ் பயங்கரவாதிகள் உட்பட பல்வேறு பாலஸ்தீன பயங்கரவாத குழுக்கள் கலந்துகொண்டனர்.

விடுதலை புலிகளை ஒழிக்கிறேன் என்று சொல்லி தமிழ் மக்கள் மீது சிங்கள ராணுவம் தடை செய்யப்பட்ட வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகளை வீசி ஆயிரக்கணக்கில் மக்களை கொன்றழித்தது நிரூபணம் ஆன பிறகும், ஐநா சபையில் அவ்வாறு நடக்கவே இல்லை என்று வக்காலத்து வாங்கிய அரபு நாடுகளின் பிண்ணனியில் இருந்தது, ஹமாஸ் பயங்கரவாதிகள் ஆதரவு பெற்ற பாலஸ்தீன அரசு தான், இன்று இஸ்ரேல் வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகள் வீசுவதாக உளறிக் கொண்டு திரிகிறது.

இலங்கை அரசு வெள்ளை பொஸ்பரஸ் வீசவில்லை என்பது உண்மையென்றால் இஸ்ரேல் வெள்ளை பொஸ்பரஸ் குண்டுகளை பயன்படுத்துகிறது என்று கூறுவதும் பொய்தான். இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் அலி சப்ரி, அண்மையில் இந்தியா, கனடா இடையிலான அரசியல் மோதலின் போது, இலங்கையில் நடக்காத இனப்படுகொலையை நடந்ததாக கனடா கூறியது என்று குறுக்கு சால் ஓட்டிக்கொண்டிருந்தார். இலங்கையில் இனப்படுகொலை நடக்கவில்லை என்றால், பாலஸ்தீன் இனப்படுகொலை என்பதும் கற்பனை தான். இந்திய, கனடா வெளியுறவு மட்டத்தில் என்ன நடக்கிறது என்றே தெரியாமல், இந்த வெளியுறவு அமைச்சர் குறுக்கு சால் ஓட்டிக் கொண்டிருக்கிறார்.

காத்தான்குடி பள்ளிவாசல் தாக்குதல் முதல் எத்தனையோ தாக்குதல்களை ஊர்க்காவல் படையை வைத்துச் செய்துவிட்டு, பழியை விடுதலை புலிகளின் மீது போட்டு, இஸ்லாமியர் தமிழர் முரண்களை ஏற்படுத்தி தமிழின படுகொலையை முடித்த சிங்கள பேரினவாதம், இறுதியில் அந்த இஸ்லாமியர்களுக்கு கூட இலங்கையில் வாழ இடமில்லாமல் செய்து விடுவது போல் பௌத்த பேரினவாதத்திற்கு தூபம் போட்டு வளர்த்து வருகிறது.

2014ஆம் ஆண்டு ராஜபக்ச, பாலஸ்தீன் பயணம் செய்தபோது இலங்கைக்கு வெளியே ராஜபக்ச பெயரில் தொழில் கல்வி மையம் அமைத்து தமிழின படுகொலைக்கு அங்கீகாரம் அளித்தது பாலஸ்தீனம். போராளிகள் என்றால் எதிரிகளின் ராணுவத்தை தாக்க வேண்டும் ஆனால் கடந்த அக்டோபர் ஏழாம் நாள் அன்று ஹமாஸ் பயங்கரவாதிகள் இஸ்ரேலுக்குள் புகுந்து நடத்திய தாக்குதலில் *160* ராணுவத்தினர் மட்டுமே உயிரிழந்தார்கள். பெண்கள் குழந்தைகள் *1300* அப்பாவி மக்கள் தான் பலியானார்கள்.

போரில் பெண்கள் குறி வைக்கப்படுவது உலகம் முழுவதும் பாசிசம் மற்றும் பயங்கரவாதத்தின் ஒரு கொள்கையாகவே இருக்கிறது. இஸ்ரேல் பாலஸ்தீன முரண்பாடுகளுடன் எந்தத் தொடர்பும் இல்லாத ஒரு இசை நிகழ்ச்சியில், *36* நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவிகளை ஹமாஸ் பயங்கரவாதிகள் கொன்று குவித்தனர். அதுவும் ஜெர்மனியில் இருந்து முன்பதிவு செய்து வந்திருந்த ஒரு பெண்ணைக் கொன்று நிர்வாணமாக எடுத்துச் சென்றனர். இன்னொரு பெண்ணை கைகளால் கட்டி இழுத்துச் சென்றதைப் பார்த்தபொழுது ஈழத்து இசைப்பிரியாவும் மணிப்பூரில் இரு அப்பாவி பெண்களுமே நினைவுக்கு வந்தனர். மூன்றுமே ஒரே மாதிரியான பயங்கரவாத நிகழ்வுகள் தான்.

இஸ்ரேலிய ராணுவம் இயல்பாகவே போரில் குடியிருப்புகளை குறிவைத்து தான் குண்டுகள் வீசும். ஹமாஸ் பயங்கரவாதிகள் அதை உணர்ந்திருந்தும் கூட இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர், மிகப்பெரிய யூத படுகொலையை அரங்கேற்றி *1300* இஸ்ரேலிய பொது மக்களை கொன்று குவித்து இஸ்ரேலிய மிருகங்களை தூண்டி விட்டது ஏன்? வேளாண்மையை மட்டுமே தொழிலாகக்கொண்டு அழகான கூட்டுறவு வாழ்க்கை வாழ்ந்து வந்த இஸ்ரேலின் கிப்புஸ் பீயர் கிராமத்தில் நுழைந்து நூற்றுக்கணக்கான பெண்கள், குழந்தைகள் மற்றும் பொது மக்களை ஹமாஸ் பயங்கரவாதிகள் கொன்று குவித்ததற்கு, அதேபோல இஸ்ரேல் எதிர்வினை ஆற்றுகிறது. தவறு இரண்டு தரப்பிலும் இருக்கும் பொழுது நீங்கள் ஏன் உணர்ச்சி வசப்பட்டு புரிதல் இல்லாமல் கேள்விகளை எழுப்புகிறீர்கள்? இன்று பாலஸ்தீன் ஆதரவு நிலை எடுத்து லட்சக்கணக்கான அண்டை நாட்டு மக்கள் பேரணி நடத்துகிறார்கள். தமிழ் நாட்டில் *2009* ஆம் ஆண்டு இதேபோன்று முன்னெடுக்கப்பட்ட பொழுது, ஆரம்ப கட்டத்திலேயே நசுக்கப்பட்டது. அதன் பிறகு ஈழத்தமிழர்கள் அரசியல் அனாதைகளாக தான் இருக்கிறார்கள். அதை மாற்ற என்ன வழி என்று நீங்கள் கேள்வி எழுப்பியதுண்டா?

அரபு கூட்டமைப்பு நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக ஐநாவில் செயல்பட்டது ஏன் என்று சிந்தித்தது உண்டா?. ஆனால் காசாவை விட்டு வெளியேறும் பாலஸ்தீன் மக்களை, கனரக வாகனங்கள் கொண்டும், தடுப்புகளை அமைத்தும் தடுத்து நிறுத்துகிறது ஹமாஸ். இஸ்ரேல் குண்டு வீசினால் அவர்கள் உயிர் பறிபோகும் தானே? அதைக் குறித்து கேள்வி எழுப்புங்கள்.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன் இடையே உள்ள இன்னொரு நுட்பமான வேறுபாடு. இஸ்ரேல் தன் மக்களை கவசம் போல பாதுகாத்தபடி தாக்குதல் நடத்தும். ஆனால் ஹமாஸ் பயங்கரவாதிகள் தங்களை பாதுகாக்க கவசம் போல மக்களை பயன்படுத்திக் கொள்கிறார்கள். பாலஸ்தீனில் காசாவின் நூற்றுக்கணக்கான நிலத்தடி சுரங்கங்களில் ஒன்றில் கூட வசிக்கவில்லை. எல்லாம் ஹமாஸ் பயங்கரவாதிகளின் வசிப்பிடங்கள் தான். தாக்குதல் நடக்கும் பொழுது அவர்கள் எளிதாக தப்பி விட முடியும்.

மக்களை வெளியேறச் சொல்லிவிட்டு தாக்குதல் நடத்த இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது உண்மையில் வியப்புதான். குடியிருப்புகளை குறிவைத்து வெறித்தனமாக தாக்குதல் நடத்தும் வழக்கம் உள்ள இஸ்ரேல் ஏதோ கருணை மனப்பான்மை போன்ற தொனியில் பேசுவது புரியவில்லை. ஏறக்குறைய தரைவழித் தாக்குதல் தொடங்கிவிட்டது. ஹமாஸ் பயங்கரவாதிகளால் வெளியேற விடாமல் தடுத்து வைக்கப்படும் பாலஸ்தீன் மக்களை நினைத்தால் பெரும் கவலையாக தான் இருக்கிறது. நமக்கு ஜெர்மானிய பெண்ணாக இருந்தாலும், இசைப்பிரியாவாக இருந்தாலும், மணிப்பூர் பெண்ணாக இருந்தாலும், பாலஸ்தீன் குழந்தையாக இருந்தாலும், இஸ்ரேல் குழந்தையாக இருந்தாலும் எல்லா உயிர்களும் ஒன்று தான்.

ஆனால் அரபு நாடுகளும் அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளும் அல்லது பாலஸ்தீன் ஆகட்டும், இந்தியா, சீனா, பிரேசில், ரஷ்யா எந்த நாடாக இருந்தாலும் வெளி விவகாரங்களை பொறுத்தவரையில் தனது சொந்த நாட்டு அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை கருத்தில் கொண்டே செயல்படும். அந்த வகையில் தான் ஆயுத பேரத்திற்கு அடிபணிய வைக்க அமெரிக்கா இலங்கைக்கு எதிரான ஒரு மட்டமான தீர்மானத்தை கொண்டு வந்தது.

**தொடரும்...**

குமரேசன்

# இலங்கையின் அபாயகரமான உள்நாட்டுக் கடன் மீளமைப்பு

சர்வதேச நாணய நிதியம் மற்றும் இலங்கை என்பவற்றுக்கிடையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான ஒப்பந்தம். எதிர்கொண்டு வரும் கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகளை கவனத்திலெடுக்கத் தவறுகின்றது. அதற்குப் பதிலாக. அது உழைக்கும் மக்கள் மீது மிக மோசமான விதத்திலான பாதிப்புக்களை எடுத்துவரக் கூடிய பெருமளவுக்கு பிற்போக்கு இயல்பிலான வழிமுறைகள் மீது கவனம் செலுத்துவதுடன். அது நாட்டின் தொடர்ந்து நீடிக்கும் கடன் சுமையை மேலும் தீவிரப்படுத்த முடியும்.




இலங்கையின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் அவருடைய சகோதரர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை வெளியேற வைத்த அறகலய என அழைக்கப்பட்ட பாரிய மக்கள் எதிர்ப்பியக்கம் முன்னெடுக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு சற்று மேற்பட்ட காலப் பிரிவுக்குள் இலங்கை மக்கள் மீண்டும் ஒரு முறை வீதியில் இறங்கியிருக்கிறார்கள்.

பொது மக்களின் அதிருப்தி மீண்டும் தலைதூக்குவதற்கான தூண்டுதல் காரணி சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் என்பவற்றுக்கிடையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான ஒப்பந்தமாகும். நாட்டின் நீடித்து வரும் சென்மதி நிலுவை நெருக்கடியைக் கவனத்திலெடுக்கும் நோக்கத்தில் செய்துகொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் நான்கு வருடத்துக்கு மேற்பட்ட காலப் பிரிவின் போது இலங்கைக்கு 3 பில்லியனுக்கும் குறைந்த அமெரிக்க டொலர்களையே வழங்குகின்றது. நாடு அதன் கடன்களை திருப்பிச் செலுத்தும் கடப்பாட்டினை நிறைவேற்றி வைப்பதற்குத் தேவைப்படும் தொகையில் இது ஒரு சிறு அளவாக இருந்து வருவதுடன். 2022ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 18 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்து வந்த அதன் அந்நியச் செலாவணி வருவாயில் ஆறில் ஒரு பங்கு மட்டுமேயாகும்.

இந்த அவசர கடனுதவிக்கு பகரமாக சர்வதேச நாணய நிதியம் தொடரான பல நிபந்தனைகளை விதித்துள்ளது. அந்நிபந்தனைகள் இலங்கையின் ஊதியம் மற்றும் வாழ்க்கைச் செலவு நெருக்கடிகள் என்பவற்றை கணிசமான அளவில் தீவிரப்படுத்தியுள்ளன. குறிப்பாக. சந்தை செலாவணி விகிதங்களுக்கு நகர்ந்து செல்லவேண்டும் எனக் கட்டாயப்படுத்திய பணிப்புரை உடனடியாக தீவிரமான நாணயப் பெறுமதி இறக்கமொன்றுக்கு வழிகோலியது. அதன் விளைவாக. இறக்குமதி செய்யப்படும் எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்கள் என்பவற்றின் விலைகள் வானளாவ அதிகரித்தன. மேலும். ஜூன் 2022க்கும் பெப்ரவரி 2023 க்கும் இடைப்பட்ட காலப் பிரிவின் போது மின்சார கட்டணங்களில் 165% அதிகரிப்பு ஏற்படுவதற்கு அது பங்களிப்புச் செய்தது.

அரசிறை கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த நிலையில் பொருளாதாரம் தொடர்ந்தும் அதன் வீழ்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2022 இல் 7.8% ஆல் வீழ்ச்சியடைந்ததுடன். 2023 இன் முதல் காலாண்டின் போது 11.5% ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது. இது வேலைவாய்ப்பு. வாழ்வாதாரங்கள். சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியின் சாத்தியப்பாடு என்பவற்றின் மீது மிக மோசமானதொரு தாக்கத்தை எடுத்து வந்திருந்தது. அதனையடுத்து மெய் வேதனங்கள் 2022 இல் 30 - 50% ஆல் வீழ்ச்சியடைந்ததுடன். அவை தொடர்ந்தும் தேக்க நிலையில் இருந்து வந்துள்ளன.

ஊழலுக்கெதிராகப் போராடுதல் மற்றும் சட்ட விரோதமான நிதிப் பாய்ச்சல்களைத் தடுத்து நிறுத்துதல் என்பவற்றின் முக்கியத்துவம் குறித்து வார்த்தைஜாலங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும். சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் இந்தப் பிரச்சினைகளை வினைத்திறன் மிக்க விதத்தில் கையாள்வதற்கு போதிய வலுவைக் கொண்டதாக இருந்து வரவில்லை. கம்பனித்துறை வருமான வரிகளில் அது ஒரு மிதமான அளவிலான அதிகரிப்பை உள்ளடக்கினாலும் கூட. செல்வ வரியினை விதிக்கும் சாத்தியப்பாட்டினை அது புறக்கணிக்கின்றது. மேலும். பெறுமதி சேர் வரியை 15% ஆல் அநேகமாக இரட்டிப்பாக அதிகரித்தல் போன்ற பெருமளவுக்கு பிற்போக்கு இயல்பிலான வரி முறைகள் மீது அது கவனம் செலுத்தியிருப்பது. மறைமுக வரிகளுக்கூடாக உருவாக்கப்படவிருக்கும் மேலதிக வருமானத்தின் பெரும் பகுதி சாதாரண மக்கள் மீது மிதமிஞ்சிய அளவிலான ஒரு தாக்கத்தை எடுத்து வரும் என்பதைக் குறிக்கின்றது.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடன்களை மீளமைப்புச் செய்ய வேண்டும் என்ற சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைக்கு இணங்கியொழுகுவது குறித்து அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானத்துக்கான ஓர் எதிர்வினையாகவே தற்போதைய எதிர்ப்பு ஆர்ப்பாட்ட அலை தோன்றியிருக்கிறது. வெளிநாட்டுக் கடனை தாங்கிக்கொள்ளக்கூடிய ஒரு மட்டத்துக்கு குறைக்கும் விடயத்தில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக. இந்த ஒப்பந்தம் மொத்தக் கடனை குறைக்கும் விடயத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதன் மூலம் வெளிநாட்டுக் கடன் வழங்குநர்கள் தொடர்பாக விதிக்கப்பட்டிருக்கும் பிணைகளின் பெறுமதி இழப்பு விகிதத்தை 30% ஆக மட்டுமே வைத்துள்ளது.

இது நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியிருப்பதுடன். அதனை நியாயப்படுத்துவது சிரமமானதாக இருந்து வருகின்றது. உலகளாவிய நாணய இருப்பை வெளியிடாத நாடுகளில் உள்நாட்டுக் கடன் மற்றும் வெளிநாட்டுக் கடன் என்பவற்றுக்கிடையில் ஒரு தெளிவான வேறுபாடு இருந்து வருகின்றது. அரசாங்கங்கள் தமது சொந்த நாணயங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உள்நாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்த முடியும் அவை அவ்வாறு செய்தும் வருகின்றன. தமது சொந்த நாணயங்களின் வழங்கல் அந்தந்த அரசாங்கங்களின் மத்திய வங்கிகளினால் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு மாறான விதத்தில். வெளிநாட்டு நாணயத்தில் கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டுமானால் அந்நியச் செலாவணி வருவாயை ஈட்டுவதோ அல்லது புதிய கடனெடுப்புக்களை மேற்கொள்வதோ அவசியமாகும்.

இலங்கை எதிர்கொண்டு வரும் நெருக்கடி. அந்நியச் செலாவணி இருப்புகள் போதியளவில் இல்லாதிருப்பதன் காரணமாக வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்த முடியாதிருக்கும் நிலையின் விளைவாகவே தோன்றியிருக்கின்றது. அரசாங்கம் 2016 தொடக்கம் இரு தரப்பு மற்றும் முத்தரப்பு கடன் வழங்குநர்களையும் உள்ளடக்கிய விதத்தில் வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களுக்கு கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கென பிரதானமாக தனியார் கடன் வழங்குநர்களிடமிருந்து புதிய சர்வதேச கடன்களைப் பெற்றுக்கொள்ள விரும்பியது. மாற்றுத் தீர்வுகளைக் கண்டறிவதற்குப் பதிலாக. அதன் வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்துவதனை நிறுத்துவதற்கு 2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அரசாங்கம் முடிவு செய்தது.

ஆனால். ஏற்கனவே வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் ஒரு பொருளாதாரத்தில் உள்நாட்டுக் கடன்களை மீளமைப்புச் செய்வது என்பது. வேதனைமிக்கதாகவும். அதேபோல அநாவசியமானதாகவும் இருந்து வருகிறது. இலங்கையின் உள்நாட்டுக் கடன்களை மத்திய வங்கி. வர்த்தக வங்கிகள் மற்றும் ஓய்வூதிய நிதியங்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் பல்வேறு நிறுவனங்கள் வைத்துள்ளன. நாட்டின் வங்கித் தொழில் முறைமை ஏற்கனவே மிகவும் மோசமான விதத்தில் பலவீனமடைந்திருக்கும் பின்னணியில். எதிர்பார்க்கப்படும் சீராக்கத்தின் மிக மோசமான பாதிப்புக்களை ஓய்வூதிய நிதியங்கள் நிச்சயமாக எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இது ஏற்கனவே பாரிய விலை அதிகரிப்புக்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் தொழிலாளர்களின் ஓய்வுகால சேமிப்புக்கள் மீது கணிசமான ஒரு தாக்கத்தை எடுத்து வர முடியும். இலங்கையின் மிகப் பெரிய ஓய்வூதிய நிதியங்கள் வைத்திருக்கும் இறைமைக் கடன் முறிகளின் வட்டி விகிதங்களை 20% இலிருந்து 12% ஆக குறைப்பதன் மூலமும். அதன் பின்னர் 2025ஆம் ஆண்டு தொடக்கம் அவை முதிர்ச்சியடையும் வரையில் வட்டி விகிதத்தை 9% ஆகக் குறைப்பதன் மூலமும் அரசாங்கம் அதன் வட்டி சுமையை வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.5% ஆகக் குறைத்துக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அகிலன் கதிர்காமர் அண்மையில் மேற்கொண்ட மதிப்பீடுகள். இதன் விளைவாக இன்றிலிருந்து ஒரு தசாப்த காலத்துக்குள் ஓய்வூதிய நிதியங்களின் மதிப்பு 30% ஆல் வீழ்ச்சியடையும் என உத்தேசிக்கின்றன. மேலும். பெரும்பாலான சந்தரப்பங்களில் உழைக்கும் மக்கள் வைத்திருக்கும் ஒரேயொரு நிதிச் சொத்தாக இருந்து வரும் இந்த ஓய்வூதிய நிதியங்களின் ஆதாயங்கள் மீது 30% வரி அறவிடப்படவுள்ளது. இது கம்பனித்துறையில் பல கம்பனிகள் மீது பிரயோகிக்கப்படும் வரி விகிதத்திலும் பார்க்க உயர்வானதாகும்.

தமது வாழ்நாள் சேமிப்புக்களை இந்த ஓய்வூதிய நிதியங்களில் முதலீடு செய்திருக்கும் பெருந் தொகையான தொழிலாளர்கள் வரி அறவிடப்படக் கூடிய குறைந்தபட்ச வருமானத் தொகையிலும் பார்க்க குறைவான வேதன வருமானங்களையே உழைத்து வருகின்றார்கள். ஆடைத் தொழில்துறையில் வேலை செய்து வரும் பெண்கள் மற்றும் சிறுபான்மை தமிழ் குழுக்களைச் சேர்ந்த பெருந்தோட்டத் தொழிலாளர்கள் போன்ற பால்நிலை மற்றும் இனத்துவ அடிப்படையில் பாரபட்சம் போன்ற ஒன்றுடனொன்று சம்பந்தப்பட்ட எண்ணற்ற பாதிப்புக்களை எதிர்கொண்டு வரும் தொழிலாளர்களையும் இது உள்ளடக்குகின்றது.

இந்தக் குழுக்கள் ஏற்கனவே தமது வாழ்க்கைத் தரங்களில் பாரியளவிலான ஒரு வீழ்ச்சியை அனுபவித்து வந்துள்ளன. இலங்கையின் 22.2 மில்லியன் மக்களில் சுமார் 56% த்தினர் இப்பொழுது பன்முகப் பரிமாணங்களைக் கொண்ட பலவீன நிலைமைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இவர்களில் பெண்கள் மற்றும் இளம் பெண்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரிவினராக இருக்கின்றனர். ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளில் சுமார் 43%த்தினர் போசாக்கின்மையினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை உத்தியோகபூர்வ மதிப்பீடுகள் தெரிவிக் கின்றன. அதேபோல. கணிசமான அளவிலான கர்ப்பிணித் தாய்மார் மற்றும் தாய்ப்பாலூட்டும் பெண்கள் ஆகியோரும் போசாக்கின்மையை எதிர்கொண்டுள்ளனர்.

இலங்கையின் வேதனத் தொழிலாளர்களுக்கு உரித்தான சிறு அளவிலான ஓய்வூதிய நிதியங்களை இலக்காகக் கொள்வதன் மூலம் அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன் மீளமைப்புத் திட்டம் தற்போதைய வர்க்க. பால்நிலை மற்றும் இனத்துவ ஏற்றத்தாழ்வுகளை மேலும் தீவிரப்படுத்த முடியும். கடின உழைப்புக்கூடாக ஈட்டிக் கொண்டிருக்கும் தமது சேமிப்புக்கள் இல்லாமல் செய்யப்படும் பொழுது. வறுமை மட்டத்திலிருக்கும் தொழிலாளர்கள் மேலும் கீழ் நிலைக்குள் தள்ளப்படுவார்கள்.

அதேவேளையில். இந்த சீராக்க செயன்முறை. சிக்கனம் மற்றும் குறைந்து வரும் சமூக சேவைகள் என்பவற்றின் பின்னணியில் தொடர்ந்தும் வேதனமற்ற பராமரிப்புப் பணிகளை வழங்கிவரும் பெண்களின் மீது பெருமளவுக்கு தங்கியிருந்து வருகின்றது. இலங்கையின் உழைக்கும் வர்க்க பெண்களின் இந்தப் பரிதாப நிலை. நாட்டின் கடன் நெருக்கடி தெளிவான விதத்தில் எடுத்து வந்திருக்கும் பால்நிலை அடிப்படையிலான பாதிப்புக்களையும். அதனை எதிர்கொள்வதற்கான அரசாங்கத்தின் அணுகுமுறையையும் எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கையின் தொடர்ந்து நீடித்து வரும் பொருளாதார நெருக்கடிக்கு உண்மையான ஒரு தீர்வு கிட்ட வேண்டுமானால் உத்தி தொடர்பான தீவிரமான ஒரு மாற்றம் அவசியப்படுகின்றது.

13ஆம் பக்கம் பார்க்க...

06ஆம் பக்கத் தொடர்ச்சி...

இந்த விசாலமான வார்த்தைப் பிரயோகங்களுடனான குற்றங்கள் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் ஆபத்தைக் கொண்டிருக்கின்றன என்று ஊடகத்துறை தொடர்பான சட்டங்களில் நிபுணத்துவம் கொண்டவர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள்.

ஒன்லைன் பாதுகாப்புச் சட்டமூலம் தற்போதைய வடிவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமேயானால் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை மிகவும் மோசமாகப் பாதிக்கும் என்பதுடன் இலங்கையில் ஏற்கெனவே சுருங்கிக் கொண்டிருக்கும் சிவில் பரப்பை (Civic Space) மேலும் குறுகச்செய்துவிடும் என்று சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு (International Commission of Jurists) கூறியிருக்கிறது.

தகவலைப் பெறுவதற்கும் கருத்தை வெளிப்படுத்துவதற்குமான சுதந்திரம் உட்பட மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்துவதை சட்டமூலம் மலினப்படுத்தும் என்றும் அந்த ஜூரர்கள் ஆணைக்குழு கடந்த வாரம் அதன் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

அதேவேளை, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தையும் ஒன்லைன் பாதுகாப்புச் சட்டமூலத்தையும் கைவிடவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது. இரு சட்டமூலங்களுமே மக்களின் சுதந்திரத்தைப் பாரதூரமாகப் பாதிக்கும் என்பதுடன் நாட்டில் ஜனநாயகத்துக்கும் சட்டத்தின் ஆட்சிக்கும்பாரியபாதிப்பைக் கொண்டுவரும் என்று கூறியிருக்கும் சட்டத்தரணிகள் சங்கம் சட்டத்துறை சமூகம் உட்பட இந்த விவகாரங்களில் பங்கும் ஈடுபாடும் கொண்ட தரப்புகளுடன் கலந்தாலோசிக்காமல் சட்டமூலங்களை அரசாங்கம் கொண்டுவந்திருப்பதை கடுமையாக கண்டனம் செய்திருக்கிறது.

ஒன்லைன் பாதுகாப்புச் சட்டமூலத்தைக் கொண்டுவரும் தருணம் குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு அமைச்சர் ரிறான் அலஸூக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டிருக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டமூலங்களின் ஊடாக கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை ஆபத்துக்குள்ளாக்குவதைத் தவிர்த்து சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்புக்களின் நிறுவன ரீதியான ஆற்றல்களை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துமாறு கூறியிருக்கிறது. சட்டமூலத்துக்குஏழுதிருத்தங்களையும் ஆணைக்குழு முன்மொழிந்திருக்கிறது.

சட்டமூலத்துக்கு கொடுக்கப் பட்டிருக்கும் பெயர் ஒன்லைன் ஆபத்துக்களில் இருந்து சிறுவர்களைப் பாதுகாக்கும் நோக்கமுடையது என்று பெற்றோர்கள் தவறாக நம்புவதற்கு வழிவகுக்கிறது என்று கூறியிருக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ், சட்டமூலம் உண்மையில் சமூக ஊடகங்களினால் விமர்சிக்கப்படுகின்றவர்களைப் பாது காப்பதை நோக்கமாகக் கொண்டது என்று குறிப்பிட்டார்.

"பல்வேறு விமர்சனங்களில் இருந்தும் அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் பாதுகாப்பதே ஒன்லைன் பாதுகாப்புச் சட்டமூலத்தின் நோக்கமாகும் என்று சுட்டிக்காட்டும் சாலிய பீரிஸ் சமூக ஊடகங்களை ஒழுங்கமைப்பதுதான் அரசாங்கத்தின் உண்மையான நோக்கமாக இருந்தால் அதற்கு புதிய சட்டங்கள் தேவையில்லை. இணையவெளிக் குற்றச்செயல்களை கையாளுவதற்கு தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டங்களே போதுமானவை என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தை புறமொதுக்கிவிடக்கூடியதும் அந்தச் சட்டத்தின் மூலமாக கடந்த சில வருடங்களாக அடையக்கூடியதாக இருக்கும் நேர்மறையான விளைவுகளை பயனற்றவையாக்கிவிடக்கூடியதுமான சட்டங்களைக் கொண்டுவருவதை அரசாங்கம் தவிர்க்கவேண்டும். பிரதமராக இருந்தபோது தானே நீக்கிய குற்றவியல் அவதூறுச் சட்டத்தை பின்கதவின் ஊடாக மீண்டும் கொண்டுவரும் ஒரு முயற்சியாக ஒன்லைன் பாதுகாப்புச் சட்டமூலம் அமையும் என்பதை ஜனாதிபதி விக்கிரமசிங்க உணர்ந்து கொள்ளவேண்டும் என்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை கடந்தவாரம் அதன் ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைக் கொண்டுவரும் விவகாரத்தில் நடந்து கொண்டதைப் போன்றே ஒன்லைன் பாதுகாப்புச் சட்டமூல விவகாரத்திலும் பொது விவாதத்துக்கு அல்லது பரந்தளவிலான கலந்தாலோசனைக்கு அரசாங்கம் வாய்ப்பைத் தரவில்லை என்பது முக்கியமான குற்றச்சாட்டாக இருக்கிறது. சட்டங்களை கொண்டு வரும்போது பரந்தளவிலான கருத்தாடலுக்கு வாய்ப்புக்களை வழங்காமல் இருப்பது பொதுவில் இலங்கை அரசாங்கங்களின் வழக்கமாக இருந்து வருகிறது.

சட்டவாக்கச் செயன்முறைகள் அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கம் அல்லது ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அன்றி நாட்டினதும் மக்களினதும் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். அந்த செயன்முறைகளை அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கவேண்டும்.

சட்டங்கள்நீதியானவையாகவும் பயனுறுதியுடையவையாகவும் அமைவதை உறுதிப்படுத்துவதற்கு முன்னதாக சமூக நலனில் அக்கறைகொண்ட சட்ட நிபுணர்கள், கல்விமான்கள், மதத்தலைவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுடன் விரிவான கலந்தாலோசனைகளை நடத்துவதும் மக்களின் கருத்துக்களை அறிந்துகொள்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுமே ஆரோக்கியமான ஜனநாயக செயன்முறைகளாக இருக்கும்.

ஒன்லைன் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்னதாக அகல்விரிவான விவாதங்கள் முன்னெடுக்கப்பட்ட இரு சர்வதேச உதாரணங்களை அவதானிகள் கவனத்துக்கு கொண்டுவந்திருக்கிறார்கள். நான்கு வருடகால பொது விவாதத்துக்குப் பின்னரே பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இரு வாரங்களுக்கு முன்னர் ஒன்லைன் பாதுகாப்புச் சட்டமொன்றை நிறைவேற்றியது. உலகளாவிய சமூக ஊடகத் தளங்களுடன் மாத்திரமல்ல, சட்டத்தரணிகள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஈடுபாடு கொண்ட அமைப்புக்களுடனும் விரிவான கலந்தாலோசனைகள் நடத்தப்பட்டன.

அந்தச் சட்டத்தின் உள்ளடக்கங்கள் கணிசமானளவுக்கு மீளாய்வு செய்யப்பட்டதுடன் பொதுமக்களினாலும் நாடாளு மன்றத்தின் மக்கள் சபை மற்றும் பிரபுக்கள் சபையினாலும் முன் மொழியப்பட்ட திருத்தங்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இலங்கை சட்டமூலத்தில் கூறப்பட்டிருப்பதைப் போன்று அரசாங்கத் தலைவரினால் நியமிக்கப்படும் ஒரு ஆணைக்குழுவிடம் அல்ல ஐக்கிய இராச்சியத்தின் அரச ஒழுங்கமைப்பு நிறுவனமான தகவல் தொடர்பு அலுவலகத்திடமே (UK Office of Communications) ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் சட்டம் கருத்துவெளிபாட்டுச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் கருத் தூன்றிய கவனத்தைச் செலுத்தியிருக்கிறது என்று தகவல் அறிவதற்கான உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினரும் குடியியல் மற்றும் மனித உரிமைகள் விவகாரங்களில் மிகுந்த அக்கறை கொண்டவருமான சட்டத்தரணி கிஷாலி பின்ரோ ஜெயவர்தன எழுதியிருக்கிறார்.

இலங்கையின் ஒன்லைன் பாதுகாப்புச் சட்டமூலம் சிங்கப்பூரின் சமூக ஊடக பாதுகாப்பு சட்டத்தை (Protection from Online Falsehood and Manipulation Act) பின்பற்றியதாக வரையப்பட்டிருப்பதாகக் கூறப் படுகிறது. ஆனால், அரசியல் நோக்கங்களுக்காகச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கும் பேச்சு சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலை தோற்றுவிக்கவும் கூடியவை என்று நியாயமான அச்சத்தை தரக்கூடியதாக சில ஏற்பாடுகள் இலங்கையின் சட்டமூலத்தில் சேர்க்கப்பட்டுள்ளன என்று அவதானிகள் கூறுகிறார்கள்.

ஒளிவுமறைவின்றி பரந்தள விலான பொது ஆலோசனைச் செயன்முறைகளுக்குப் பின்னரே சிங்கப்பூர் நாடாளுமன்றத்துக்கு அந்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டது. ஆனால், இலங்கையில் அரசாங்க வர்த்தமானியில் சட்டமூலம் வெளியான பின்னரே விவாதம் அதுவும் அரசாங்க தரப்பின் ஈடுபாடு இன்றி சிவில் சமூக அமைப்புக்களினால் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த விவாதங்களில் முன் வைக்கப்படுகின்ற கருத்துக்களை அரசாங்கம் கவனத்தில் எடுத்து மாற்றங்களைச் செய்ய முன்வருமா என்று நம்பிக்கை வைக்கக்கூடியதாக நிலவரம் இல்லை. ஏனென்றால், இன்னொரு மக்கள் கிளர்ச்சி மூண்டுவிடுமோ என்று அஞ்சிக்கொண்டிருக்கும் அரசாங்கத்தைப் பாதுகாப்பதே சட்டமூலத்தின் உண்மையான நோக்கமாக இருக்கிறது.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படுமேயானால் தோன்றக் கூடிய நிலவரம் எவ்வாறானதாக இருக்கும் என்பதை உணர்த்துவதற்கு உகண்டாவின் முன்னாள் சர்வாதிகாரி இடி அமீன் தனது நாட்டில் பேச்சு சுதந்திரம் பற்றி ஒரு தடவை தெரிவித்த கருத்தை நினைவுபடுத்துவது பொருத்தமானதாக இருக்கும்.

"உகண்டாவில் பேச்சுச் சுதந்திரம் இருக்கிறது. ஆனால், பேச்சுக்கு பிறகு அந்தச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த முடியாது."

12ஆம் பக்கத் தொடர்ச்சி...

**வலுவான ஒரு பொருளாதார மீட்சியை எடுத்து வரும் முயற்சியின் போது அரசாங்கமும். சர்வதேச நாணய நிதியமும் உழைக்கும் மக்கள் மீது இந்தச் சீராக்க நடவடிக்கையின் சுமைகளை ஏற்றுவதற்குப் பதிலாக. அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகளை விருத்தி செய்யும் விடயத்தில் கவனம் செலுத்துவது அவசியமாகும்.**

**ஜயாத்தி கோஷ்**

**ஜயாத்தி கோஷ். மசாசுசெட்ஸ் அமஹர்ஸ்ட் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரியராக இருந்து வருவதுடன். ரோம்ஸ் கிளப்பின் நிலைமாற்றப் பொருளாதார ஆணைக்குழுவின் ஒரு உறுப்பினராகவும் உள்ளார்.**

**காஞ்சன என். ருவன்புர**

**கோத்தன்பெர்க் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி புவியியல் பேராசிரியராக பணியாற்றி வரும் காஞ்சன என். ருவன்புர. இலங்கை அரசியல் பொருளாதாரத்துக்கான மெய்நிகர் மற்றும் தன்னார்வ முன்முயற்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்புக் கூட்டமைப்பின் ஓர் உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.**

PROJECT SYNDICATE தளத்தில் Sri Lanka's Dangerous Domestic Debt Restructuring **என்ற தலைப்பில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம்.**

## ஒந்தாச்சிமடத்தில் 150 வருடத்திற்கு மேற்பட்ட பாரதி பாலர் பாடசாலை இணைந்த கரங்கள் அமைப்பினால் புனரமைப்பு

மட்டக்களப்பு மாவட்டம், ஒந்தாச்சிமடம் பிரதேசத்தில் 150 வருடத்திற்கு மேலாக இயங்கிவருவதாக கூறப்படும் பாரதி பாலர் பாடசாலையை மீள் புனரமைப்பு செய்யும் தேவை உள்ளதாக ஒந்தாச்சிமடம் விளையாட்டு கழகம் மற்றும் சமூக நலன் விரும்பிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இணைந்த கரங்கள் அமைப்பினால் புனரமைப்பு செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு பாரதி பாலர் பாடசாலை அதிபர். திருமதி.வி. அமிர்தகலா தலைமையில் கையளிக்கப்பட்டது.

இணைந்த கரங்கள் அமைப்பின் கொடையாளர்களான கனகராஜ் நடராசமணி குடும்பம், தினேஸ்ராஜ் ஜனபாலசந்திரன் குடும்பத்தினரின் நிதி உதவியுடனும் இணைந்த கரங்கள் அமைப்பின் உறவுகளின் நிதி உதவியுடனும் புனரமைக்கப்பட்டு, மாணவர்களின் கல்வி செயற்பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சமூக செயட்பாட்டாளர் ந.கனகராஜ் கலந்துகொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் அப்பிரதேச கிராம சேவக உத்தியோகத்தர் க.சுரேஸ், ஒந்தாச்சிமடம் விளையாட்டுக் கழக தலைவர் ச.சிரஞ்ஜிவி, கழக உறுப்பினர்கள், அறநெறிப் பாடசாலையின் அதிபர், ஆலய பரிபாலன சபை பிரதிநிதிகள், கிராம சமூக சேவையாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான ந.கனராஜ், லோ.கஜரூபன், சி.காந்தன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. **(நூருல் ஹுதா உமர்)**

# விளையாட்டு

## உலகக்கோப்பை போட்டியில் பெரிய அணி என்பதே கிடையாது



உலகக்கோப்பை போட்டியில் பெரிய அணி என்று எதுவும் கிடையாது என கிரிக்கெட் வீரர் விராட் கோலி பேட்டி அளித்துள்ளார். உலகக்கோப்பை இந்தியாவில் உள்ள பல நகரங்களில் 13-வது உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது. இதில், இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்ஆப்பிரிக்கா, நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய அணிகள் பங்கேற்று தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். அப்போது லீக் முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்குள் நுழையும். அந்த வகையில் உலகக்கோப்பையில், இந்திய அணி வெற்றிகரமாக தனது ஆட்டத்தை தொடங்கியுள்ளது. ஆஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய அணிகளை வீழ்த்தி 6 புள்ளிகளுடன் 2 -வது இடத்தை இந்தியா பிடித்துள்ளது.

இந்நிலையில், இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி தொலைகாட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியில், "உலகக்கோப்பை போட்டியில் பெரிய அணி என்று எதுவும் கிடையாது.

பெரிய அணி என்று குறிப்பிடும் அந்த அணியின் மீது அதிக கவனம் செலுத்த தொடங்கும் போது நெருக்கடிக்கு ஆளாகி தோல்வியை சந்திக்க நேரிடும்" என்றார்.

## சிறுவர் கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி



வறுமை ஒழிப்பு வாரம் மற்றும் சர்வேதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபரின் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சிறுவர் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி நேற்று (21) சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இச்சுற்றுப் போட்டியினை சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் ஆரம்பித்து வைத்தார்.

இதில் பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம், சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.எம்.சபுறுதீன், இளைஞர் சேவை அதிகாரி எம்.எம்.ஸமீலுல் இலாஹி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எம்.காலிதீன், எம்.ஐ.அன்சார், ஏ.எம். அபுல் ஹஷ்தா, ஓய்வுபெற்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஏ.கபூர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## வெண்கலப் பதக்கம் வென்றவருக்கு கிடைத்த பரிசு







ஆசிய விளையாட்டு போட்டியில் வெண்கல பதக்கம் வென்ற கூலி தொழிலாளிக்கு ஆனந்த் மஹிந்திரா இன்ப அதிர்ச்சி கொடுத்துள்ளார். இந்திய மாநிலம், உத்தரபிரதேசத்தில் உள்ள சோன்பத்ரா மாவட்டத்தை சேர்ந்தவர் ராம் பாபு. இவருடைய தந்தை கூலி வேலை செய்து வருகிறார். இவருக்கு 3 சகோதரிகள் உள்ளனர்.

இவருடைய தந்தை வேலையான கூலி தொழிலை ராம் பாபுசெய்து வந்தார். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையான 100 நாள் வேலைக்கு சென்று தினசரி சம்பளம் பெற்று வந்துள்ளார். மாதத்திற்கு 3000 ரூபாய் முதல் 3500 மட்டுமே இவரால் பெற முடியும். ஆனாலும், இவரது தடகள கனவை நிறைவேற்றுவதற்கு உணவகங்களில் சர்வராகவும் பணிபுரிந்துள்ளார். தற்போது, சீனாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் வென்று வெண்கல பதக்கம் பெற்றுள்ளார்.

இந்நிலையில், சீனாவில் நடந்த ஆசிய விளையாட்டு போட்டிகளில் 107 பதக்கங்களை இந்தியா வென்றுள்ளது. பின்பு, இந்தியா திரும்பிய வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பல தனியார் நிறுவனங்கள் சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், மஹிந்திரா குழுமத்தின் தலைவர் ஆனந்த் மஹிந்திரா ஆசிய போட்டிகளில் வெண்கல பதக்கம் வென்ற ராம் பாபுவுக்கு பரிசு ஒன்றை அறிவித்துள்ளார்.

அதாவது, அவர் மஹிந்திரா கார்களில் இருந்து தனக்கு விருப்பமான கார்களை தேர்வு செய்து கொள்ளலாம் என கூறியுள்ளார். மேலும், அவருக்கு தன்னுடைய ஆதரவை வழங்குவதாகவும், அவரின் பயணத்திற்கு பாராட்டுகளையும் ஆன்ந்த் மஹிந்திரா தெரிவித்துள்ளார்.

## விரக்தியில் பேசிய கேப்டன் குசல்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் பெரியளவில் ஸ்கோர் குவிக்காததால் தோல்வியை தழுவியதாக இலங்கை கேப்டன் குசல் மெண்டிஸ் கூறியுள்ளார். லக்னோவில் நடந்த உலகக்கோப்பை போட்டியில் இலங்கை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவிடம் படுதோல்வி அடைந்தது. இது இலங்கை அணி உலகக் கோப்பையில் சந்தித்த தொடர்ச்சியான 3வது தோல்வி ஆகும்.

தசுன் ஷானக காயம் காரணமாக வெளியேறிய நிலையில், குசல் மெண்டிஸ் தலைமையிலும் இலங்கை தோல்வி அடைந்ததால் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. தோல்வி குறித்து பேசிய இலங்கை கேப்டன் குசல் மெண்டிஸ் கூறுகையில்,

'நாங்கள் 2 ஆட்டங்களில் நன்றாக துடுப்பாடினோம். கடந்த ஆட்டங்களில் நாங்கள் அவ்வாறு செயல்பட சிரமப்பட்டோம். அடுத்தப் போட்டியில் சிறப்பாக விளையாடுவோம் என்று நம்புகிறேன். சிறந்த மட்டத்தில் துடுப்பாடிய பெரேரா, நிசங்காவுக்கு பெருமை போய் சேர வேண்டும்.

ஆனால், நடுவரிசை மற்றும் கீழ் வரிசையில் பேட்டர்கள்பங்களிக்கவில்லை, ஒருவேளை 280-290 ஓட்டங்கள் இந்த விக்கெட்டில் வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். எங்களிடம் இன்னும் 6 ஆட்டங்கள் உள்ளன. எனது பேட்டிங் குழு மீது நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன்' என தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் சிறப்பாக பந்துவீசி 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய மதுஷன்காவை வெகுவாக பாராட்டினார் குசல் மெண்டிஸ்.

## கபில் தேவின் 36 வருட உலக சாதனை முறியடிப்பு



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரர் கபில் தேவின் 36 வருட உலக சாதனையை நெதர்லாந்து கிரிக்கெட் அணித்தலைவர் முறியடித்துள்ளார். தென்னாபிரிக்க அணிக்கு எதிராக நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியிலேயே அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிராக 36 வருடங்களுக்கு முன், 1987ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக் கிண்ண போட்டியில் பெங்களூர் மைதானத்தில் 7ஆவது இடத்தில் களமிறங்கிய அணித்தலைவர் கபில் தேவ் 58 ஓட்டங்களை பெற்றார். இதுவே 7 ஆவது இடத்தில் களமிறங்கிய ஒருவர் பெற்ற அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும்.

இந்த நிலையில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் 7 ஆவது இடத்தில் களமிறங்கிய நெதர்லாந்து அணித் தலைவர் ஸ்கொட் எட்வேட்ஸ் அதிரடியாக 10 பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட, 69 பந்துகளில் 78 ஓட்டங்களை குவித்துள்ளார். இதன்மூலம், உலகக் கோப்பை வரலாற்றில் 7ஆவது இடத்தில் களமிறங்கி, அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையை பதிவு செய்த அணித்தலைவர் என்ற சாதனையை படைத்துள்ளார். தென்னாபிரிக்க அணிக்கு எதிராக நெதர்லாந்து அணி அபாரமாக விளையாடி 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை அணியின் வீழ்ச்சி தொடர்பில் முரளிதரனின் கருத்து



இலங்கை கிரிக்கெட் அணியின் அனைத்து உறுப்பினர்களும் தலைமைத்துவத்தை பெற விரும்புவதால் தற்போதைய இலங்கை கிரிக்கெட் அணி வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார். கடந்த (17) இரவு இடம்பெற்ற பாடசாலை கிரிக்கெட் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மற்றும் பாடசாலை கிரிக்கெட் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் போட்டியின் பரிசளிப்பு விழா கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் மேலும் கருத்து தெரிவித்த அவர், "எவரேனும் ஒருவர் தலைவரான பின்னரே தன்னை அடையாளப்படுத்த முடியும் என்றால் அது தவறான விடயமாகும். நீங்கள் விளையாடும் விதத்திலயே வளர முடியுமே தவிர தலைவராகி அல்ல. தலைவரான பின்னர் நெருக்கடி நிலை ஏற்படும். அவர் சிறப்பாக விளையாடினாலும் அணி தோல்வியை தழுவினால் அவருக்கு எதிராகவே கருத்துக்கள் வரும். இதன்போது அவர் அதனை பொறுப்பேற்க வேண்டி வரும்.

எனது 20 வருட கிரிக்கெட் வாழ்க்கையில் என்னை விட சிறந்த தலைவர்கள் இருந்தனர். அதனை நீங்கள் ஏற்கவேண்டும். சில வீரர்கள் நம்மை விட சிறந்த திறமைகளை வெளிப்படுத்தலாம் என்பதை ஏற்கவேண்டும். நாம் பொறாமை கொள்ள கூடாது. என்னால் மாத்திரமே அதனை செய்ய முடியும் என நினைக்க கூடாது. ஆனால் தற்போதை தலைமுறை அவ்வாறே காணப்படுகிறது. கடந்த 10 வருட காலமாக இதுவே இடம்பெறுகிறது. இதன் காரணமாகவே இலங்கை அணி வீழ்ச்சி பாதைக்கு சென்றது. அனைவரும் அணியின் தலைமைத்துவத்தை எதிர்பார்கின்றனர். 2015 முதல் 2023 வரை எத்தனை பேர் அணி தலைவராகியுள்ளனர். 10 விரல்கள் கூட போதாது அதனை கணக்கிடுவதற்கு" என்றார்.

# உலக வலம்

## பிரித்தானியாவில் வரவுள்ள புதிய சட்டம்



பிரித்தானியாவில் 12 மாதங்களுக்கும் குறைவாக சிறைதண்டனை விதிக்கப் பட்டவர்கள் இனி சிறை செல்லத் தேவையில்லை என்ற சட்டத்தை விரைவில் கொண்டுவரவுள்ளதாக பிரித்தானிய அரசாங்கம் அறிவித்துள்ளது. பிரித்தானியா சிறைச்சாலைகளில் காணப்படும் குற்றவாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

ஆண்டொன்றிற்கு 47,000 பவுண்டுகள் செலவு அங்கு சுமார் 88,225 பேர் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்காக, மக்களுடைய வரிப்பணம் ஆண்டொன்றிற்கு 47,000 பவுண்டுகள் செலவிடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சிறைகள் நிரம்பி வழிவதைத் தடுப்பதற்காக, நீதித்துறைச் செயலரான அலெக்ஸ் சால்க் (Alex Chalk) சில புதிய திட்டங்களை முன்வைத்துள்ளார். அதன்படி, 12 மாதங்களுக்குக் குறைவான சிறைத்தண்டனை பெற்றவர்கள் இனி சிறையில் அடைக்கப்படமாட்டார்கள் எனவும் அவர்கள், காலில் மின்னணுப்பட்டை அணிவிக்கப்பட்டு, பொது இடங்களை தூய்மைப்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வன்புணர்வு மற்றும் பயங்கர பாலியல் குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகள், இவ்வாறு தெருக்களில் நடமாட அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும், அவர்கள் தங்கள் முழு தண்டனைக் காலத்தையும் சிறையில்தான் செலவிடவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவில் வெறுப்புணர்வு குற்றச்செயல்கள் அதிகரிப்பு

கனடாவில் வெறுப்புணர்வை தூண்டும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இஸ்ரேல் - ஹமாஸ் போர் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இவ்வாறு அதிக எண்ணிக்கையிலான வெறுப்புணர்வு குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. டொரண்டோ போலீசார் இது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

வெறுப்புணர்வை தூண்டும் குற்றச்செயல்கள் தொடர்பில் வழமையாக கிடைக்கும் தொலைபேசி முறைப்பாடுகளை விடவும் தற்பொழுது அதிக எண்ணிக்கையிலான முறைப் பாடுகள் கிடைக்கபெறுவதாக போலீசார் தெரிவிக்கின்றனர். குறிப்பாக இஸ்ரேல் - ஹமாஸ் போர் ஆரம்பமானதன் பின்னர் இந்த தொலைபேசி வழி முறைப்பாடுகளின் எண்ணிக்கை 132 வீதத்தினால் அதிகரித்துள்ளது. சில சந்தர்ப்பங்களில் கொலை மிரட்டல்




விடுக்கும் அளவிற்கு இந்த வெறுப்புணர்வு குற்ற செயல்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் முதல் இந்த மாதம் 7ம் திகதி வரையில் வெறுப்புணர்வு தொடர்பிலான 237 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாகவும், கடந்த ஆண்டில் இதே காலப்பகுதியில் 192 சம்பவங்கள் மட்டுமே இடம்பெற்றிருந்தன என தெரிவிக்கப்படுகிறது. போர் பதற்றம் ஆரம்பமானதன் பின்னர் டொரன்டோ போலீசார் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலக ஆஸ்டியோபோரோசிஸ் தினம்

"உலக ஆஸ்டியோபோரோசிஸ் தினம் ஆண்டுதோறும் அக்டோபர் 20 அன்று அனுசரிக்கப்படுகிறது. இந்த தினம் ஆஸ்டியோபோரோசிஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு உலகளாவிய பிரச்சாரமாகும்.

உடல் அதிக எலும்பை இழக்கும் போது, மிகக் குறைந்த எலும்பை உற்பத்தி செய்யும் போது அல்லது இவை இரண்டுமே ஆஸ்டியோபோரோசிஸ் ஏற்படுகிறது. எலும்பு முறிவு ஏற்படும் வரை இது பெரும்பாலும் அறிகுறிகள் இல்லாமே இருக்கும். எலும்பு முறிவுகள் பொதுவாக இடுப்பு, முதுகுத்தண்டு மற்றும் மணிக்கட்டில் ஏற்படும். ஆனால் இது உடலில் எந்த எலும்பும் பாதிக்கப்படலாம். இந்த நிலை வயதானவர்களில், குறிப்பாக மாதவிடாய் நின்ற பிறகு பெண்களுக்கு மிகவும் பொதுவானது. ஏனென்றால், ஹார்மோன் மாற்றங்கள் ஏற்படும்போது எலும்பு இழப்புக்கு இது வழி செய்கிறது. இருப்பினும், ஆஸ்டியோபோரோசிஸின் குடும்ப வரலாறு, குறைந்த கால்சியம் உட்கொள்ளல், உட்கார்ந்த வாழ்க்கை முறை, புகைபிடித்தல், அதிகப்படியான மது அருந்துதல் அல்லது சில மருந்துகளின் நீண்டகால பயன்பாடு போன்ற சில ஆபத்து காரணிகளைக் கொண்ட ஆண்கள் மற்றும் இளைய நபர்களையும் இது பாதிக்கலாம்.

## லெபனானுக்கான பயணங்கள் தொடர்பில் எச்சரிக்கை



லெபனானுக்கான பயணங்கள் தொடர்பில் கனேடிய அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இஸ்ரேல் - ஹமாஸ் போர் பதற்றம் காரணமாக பெலனானுக்கான பயணங்கள் தொடர்பில் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. லெபனானில் பாதுகாப்பு நிலைமைகள் மோசமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. அத்தியாவசியமற்ற பயணங் களை தவிர்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. கனேடிய வெளிவிவகார அமைச்சினால் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெறக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. போர் உக்கிமடைந்ததன் பின்னர் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கான சாத்தியங்கள் வரையறுக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. லெபானனில் தங்கியுள்ள கனேடியர்கள் வர்த்தக ரீதியான விமானங்களின் ஊடாக அந்நாட்டை வெளியேற நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

## "எக்ஸ்" தள சேவையை நிறுத்த எலான் மஸ்க் முடிவு



"உலகம் முழுவதும் கோடிக் கணக்கானோர் பயன்படுத்தும் டுவிட்டர் நிறுவனத்தை வாங்கிய உலக பணக்காரரான எலான் மஸ்க், அதை "எக்ஸ்" என்று பெயர் மாற்றினார். இந்த நிலையில் எக்ஸ் வலைதள சேவையை ஐரோப்பாவில் நிறுத்த எலான் மஸ்க் முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

கடந்த ஆகஸ்ட் மாதம் ஐரோப்பிய ஒன்றியம், டிஜிட்டல் சேவைகள் சட்டத்தை ஏற்றுக்கொண்டது. இதில் தீங்கிழைக்கும் உள்ளடக்கம் பரவுவதை தடுப்பது, சில பயனர் நடைமுறைகளை தடை செய்வது அல்லது கட்டுப்படுத்துவது, சில தரவுகளை பகிர்வது போன்ற விதிகள் உள்ளது.

இந்த புதிய இணையதள ஒழுங்குமுறை சட்டம் காரணமாக ஐரோப்பிய பிராந்தியத்தில் எக்ஸ் செயலியின் இருப்பை அகற்றுவது அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள பயனர்களை தடுப்பது குறித்து எலான் மஸ்க் ஆலோசனை நடத்தி உள்ளார்.



## தனது நீண்ட கால காதலரை பிரிந்த இத்தாலிய பிரதமர் ஜோர்ஜியா மெலோனி

நீண்ட நாள் காதலரை பிரிந்துவிட்டதாக இத்தாலி பிரதமர் ஜோர்ஜியா மெலோனி Georigia Meloni அறிவித்துள்ளார்.

ஜோர்ஜியா மெலோனியும், தொலைக்காட்சி பத்திரிகை யாளரான ஆண்ட்ரியா ஜியாம்ப்ரூனோவும் கடந்த 10 ஆண்டுகளாக சேர்ந்து வாழ்ந்த, நிலையில் தற்போதுபிரிந்துவிட்டதாக தெரிவித்துள்ளார்.

மேலும் இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக அவர் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். குறித்த பதிவில், "கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் நீடித்த ஆண்ட்ரியா ஜியாம்ப்ரூனோவுடனான எனது உறவு முடிவுக்கு வருகிறது.

எங்கள் பாதைகள் சில காலமாக வேறுபட்டுவிட்டன. அதை ஒப்புக்கொள்ளவேண்டிய நேரம் வந்துவிட்டது" என தெரிவித்துள்ளார். அண்மையில், ஜியாம்ப் ரூனோவின் நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பானது. அதில், அவர் மோசமான வார்த்தைகளை பயன்படுத்துவதையும், ஒரு பெண் சக ஊழியரிடம் தேவையற்ற கேள்வியை கேட்டு அத்துமீறுவதையும் காண முடிந்தது.

மற்றொரு நிகழ்ச்சியில், சக பெண் ஊழியர்களிடம் பாலியல் தொடர்பான கருத்துகளை பகிரங்கமாக பேசினார். இதைத்தொடர்ந்து ஜியாம்ப்ரூனோவை பலரும் கடுமையாக விமர்சித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.































இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 22.10.2023 அன்று வெளியிடப்பட்டது.